உ
குருபாதம்

Regd. No. M. 4454.

# ஞானசம்பந்தம்

தருமபுர ஆதீனத் திங்கள் வெளியீடு

[illegible] மார்கழி—1943 ஜனவரி. { இதழ் 2



திருவெண்காட்டுத் திருக்கோயில்

திருச்சிற்றம்பலம்

பேயடையா பிரிவெய்தும் பிள்ளையினோ டுள்ளநினை
வாயினவே வரம்பெறுவர் ஐயுறவேண் டாவொன்றும்
வேயனதோ ளுமைபங்கன் வெண்காட்டு முக்குளநீர்
தோய்வினையார் அவர்தம்மைத் தோயாவாந் தீவினையே.

திருச்சிற்றம்பலம்

—திருஞானசம்பந்தர்.

# சைவ சித்தாந்தப் பயிற்சி

திருக்கயிலாய பரம்பரைத் தருமபுர ஆதீனத்துக்குச் சொந்தமான திருச்சி மலைக்கோட்டை மௌனமடத்தில், ரிஷிகேச தெய்வ நெறிக் கழகத்தின் கிளைச்சங்கத்தார் கூட்டங்களும், பிரசங்கங்களும் நடத்திவருகிறார்கள்.

இக்கழகத்தில் திங்கட்கிழமைகள் தோறும் யோகாசனப் பயிற்சி வகுப்பு நடத்தப்படுகிறது. இக்கழகத்தார் மௌன மடத்தின் முன்வாயிலிலுள்ள ஸ்ரீ சுப்பிரமணியசுவாமி சந்நிதானத்தில் வியாழக்கிழமைகள்தோறும் 1½மணி நேரம் பஜனை நடத்துகிறார்கள். வெள்ளிக்கிழமைகள்தோறும் வேதாந்தம், சைவ சித்தாந்தம், முதலிய பொருள்கள்பற்றிப் பல பண்டிதர்களைக்கொண்டு சொற்பொழிவுகள் நிகழ்த்துவிக்கின்றார்கள். ஞாயிற்றுக்கிழமைகளில் சமய நூல்கள், தத்துவ நூல்களைப்பற்றி ஆராய்ச்சி செய்கின்றார்கள். இவ்வாராய்ச்சிப் பகுதிக்குத் தருமபுர ஆதீன மௌனமடம் கட்டளை ஸ்ரீமத் மௌன. சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் அவர்கள் ஆலோசனையாளராக அமர்ந்துள்ளார்கள்.

ஸ்ரீமத் தம்பிரான் சுவாமிகள் அவர்கள் இக்கழக உறுப்பினர்களுக்குத் தனி வகுப்புவைத்துச் சிவஞானபோத சூத்திரங்கள், தருமையாதீனத்தில் நடந்த மெய்கண்டான் மகாநாட்டுக் கட்டுரைகள் முதலியவைகளைப் படித்து விளக்கிக் கூறிவருகின்றார்கள். 1942 அக்டோபர், நவம்பர் மாதங்களில் சைவசித்தாந்தம், வீடுபேறு, திருமுருகாற்றுப்படை, பக்தியோகம் முதலிய பொருள்கள் பற்றிச் சொற்பொழிவுகள் நிகழ்த்தப்பெற்றன.

இக்கழகத்தின் சார்பாக மௌன மடத்தில் திருவையாறு அரசர் கல்லூரி விரிவுரையாசிரியர் சர்வதோமுக சாஹித்யாலங்கார பண்டித பிர்மஸ்ரீ N. வைத்தியநாதசாஸ்திரிகள் M. R., A. S., அவர்கள் 12, 13-12-42 ஆகிய இரண்டு நாட்களிலும் முறையே "சிவபெருமானின் பெருமையும் அடியார்களின் மகிமையும்" "கடவுள் வழிபாடு" என்னும் பொருள்கள் பற்றி விரிவுரைகள் நிகழ்த்தினார்கள்.


தருமபுர ஆதீன வெளியீடு எண் 43.

## திருவையாற்றுத் தலவரலாறு

அருநெறி காட்டிய அப்பமூர்த்திக்குத் திருமிகு செல்வக் கயிலையங் காட்சியை அன்னுளருளிய ஐயாற்றுத் தலத்தின் சிறப்பினை யாவரும் எளிதில் உணர்ந்து இறைவனை வழிபட்டு உய்யும் வண்ணம் திருவையாற்றுத் தலவரலாறு என்னும் உரை நடை நூலின் இரண்டாம் பதிப்பு வெளிவந்திருக்கிறது. புதிய கருத்துக்கள் பல சேர்க்கப்பட்டிருக்கிறது.

தனிப் பிரதி விலை ரூ 0—2—6. தபாற்செலவு ரூ. 0—0—9.

கிடைக்குமிடம்:— காரியார்,
ஸ்ரீ பஞ்சநதீஸ்வரஸ்வாமி தேவஸ்தானம்,
திருவையாறு
தஞ்சை.

உ

சிவமயம்

# தைப் பொங்கல் வாழ்த்து

மணமலி சரோருக மாமறைக் கிழவனும்
சுதையொளி காலுஞ் சுரிமுகத் தொருவனுங்
கிழக்கொடு மேலுமாய்க் கிளர்தரச் சென்றுங்
காண்டற் கரிய கண்ணுதற் கடவுள்
தாமரை நிகர்த்த காமர்சே வடிக்குச்
செம்மைசேர் ஞானச் செல்வர் நால்வரும்
ஐவகை யணிமிகு மருந்தமிழ் குடித்துத்
திருமகள் வாழ்க்கைத் தென்னாட் டகத்துத்
திசையெலாம் விளங்கத் திப்பியத் தலந்தொறும்
முறைமுறை சென்று முத்தமிழ் பொழிந்தெனஅ
அலைசெறி அளக்கர் அதன்வாய்க் குடித்து
முகிற்குலம் வந்து முறைமுறை பொழிந்து
செந்நெலுங் கன்னலுஞ் செய்தொறும் விளைந்தன
பண்டார் துடவையும் பயன்பல வளித்த (து)
ஆதலின் தகைசால் அவனிவாழ் மக்காள் !
தென்றிசைத் தினகரன் வடதிசைக் கணுகும்
மகரமாந் திங்களும் மகிழ்தர வந்ததால்
இல்லம் புதுக்குமின் ! எழில்நனி விளங்கப்
பொன்னிறங் காட்டும் புதுக்கல மெடுத்தே
அக்கார வடிசில் அமிழ்தெனச் சமைத்துக்
கதலியுங் கன்னலும் கவின்பெறு மஞ்சளும்
சேர்தர வைத்துச் செம்மையிற் படைமின் !!
பொங்கல் விழாவணி பொற்புற யெடுமின் !!!
தருமையம் பதிவாழ் சம்பந்த மாமுனி
ஆலவாய்ப் பதியி லாடக மனைத்தடத்
தீலிங்கத் திருவுரு வெழில்சேர் காந்துக்
காண்டலு முள்ளங் கரைகடந் துவகை
புளகம் போர்ப்பப் பொங்கி யெழுந்தெனஅ
அரசியல் நெறியொடு மானிறை தழைத்துத்
திருவொடு கல்வியும் சீர்த்திய மாயுளும்
பற்பல நலத்தொடும் பயன்பெறப்
பொலிவுறு மங்கலம் பொங்குவான் விழைந்தே.

திருச்சிற்றம்பலம்.

தருமபுர ஆதீன வெளியீடு எண் 39.

## புள்ளிருக்கு வேளூர்ப் புராணம்

மந்திரமும் தந்திரமும் மருந்துமாகித் தீராநோய் தீர்த்தருள வல்லானாகிய இறைவன் வைத்தியநாதர் என்னும் திருப்பெயருடன் எழுந்தருளியிருக்கும் வைத்தீஸ்வரன் கோயில் என்னும் புள்ளிருக்கு வேளூர்த் தலத்தின் அருட்டன்மைகளை யாவரும் உணர்ந்து வழிபட்டு உய்ய வேண்டுமென்று புள்ளிருக்கு வேளூர்ப் புராணம் செய்யுள் வடிவாகக் குறைந்த விலையில் கொடுக்கப்பட்டு வருகிறது. தலத்தைப்பற்றிய தேவாரப் பதிகங்கள், திருப்புகழ்ப் பாடல்கள், முத்துக்குமாரசுவாமி திருவருட்பா, தனிப்பாடல்கள் முதலியன சேர்க்கப்பட்டுள்ளன.

தனிப்பிரதி அணா 8. தபாற்செலவு அணா 3.

கிடைக்குமிடம்:— ஸ்ரீமத் கட்டளை சுவாமிகள்
**ஸ்ரீ வைத்தியநாத சுவாமி**
**தேவஸ்தானம்,**
வைத்தீஸ்வரன்கோவில் P. O.

தருமபுர ஆதீன வெளியீடு எண் 40.

## சித்தாந்த சைவ வினா விடை

இந்நூல் ஜடவுலகம் தோன்றி நின்று ஒடுங்குமுறைமை, வேத சிவாகமங்களின் விரிவுகள், நியாயம் மீமாம்சை முதலிய தத்துவ சாத்திரங்களின் இலக்கணங்கள், பதி பசு பாசங்களின் இலக்கணங்கள், அம்மையாரின் அருள் வடிவங்கள், இறைவன் அருள் மூர்த்தங்கள், சிவகுமாரர்களின் சரித்திரங்கள், சிவாலய தரிசனமுறை, புண்ணியத் தலங்கள், அத்தலங்களில் இறைவன் அருளிய திருவிளையாடல்கள், திருவிழாக்களின் விளக்கங்கள், குரு இலக்கணம், திருநீறு அக்கமணி முதலியவைகளின் தோற்றங்கள், அணிவதால் உண்டாகும் பயன்கள், சித்தாந்த சாத்திரங்களை இயற்றிய ஆசிரியர்கள் வரலாறு முதலானவைகளை யெல்லாம் நன்கு விரிவாக விளக்கிக் கூறுகின்றது. இரண்டாம் பதிப்பு இப்பொழுது வெளிவந்துள்ளது.

தனிப்பிரதி விலை ரூ 0-3-6. தபாற் செலவு ரூ 0-1-9.

கிடைக்குமிடம்:— **டெஸ்பாட்சிங் கிளார்க்**
தருமபுர ஆதீனம்,
தருமபுரம், மாயவரம். P. O.

உ

குருபாதம்

# ஞானசம்பந்தம்

மெய்கண்ட தேவ னருளாற் சிவாகம மெய்ப்பொருடேர்ந்
தையமின் மெய்யடி யாருக் களித்ததை யாய்ந்தவர்போற்
பையவுள் வந்து பொருண்மாறு பாடு பகர்ந்தவர்க்கே
செய்ய பொருளவன் செப்பிய வாறிவண் செப்புதுமே.

—சித்தாந்த நிச்சயம்.


| | | |
|---|---|---|
| மலர் 2 | சித்திரபானு௵ மார்கழி௴ 1943—ஜனவரி. | இதழ் 2 |

இதழாசிரியர்:—

தருமபுர ஆதீனம், ஒடுக்கம்-சிவகுருநாதத் தம்பிரான்.


## உள்ளுறை


1. ஞானசம்பந்தம். 55

2. திருப்பதிகவுரை.
வித்துவான், திரு. ஔவை. சு. துரைசாமிப் பிள்ளை அவர்கள், கீழ்த்திசைப் பல்கலைக்கழகம், திருப்பதி. 59

3. சொற்றுணை வேதியன்.
வித்துவான், திரு. K.M. வெங்கட்டராமையா அவர்கள், M.A., B.O.L., கொலம்பஸ் உயர்நிலைப்பள்ளி, செங்கற்பட்டு: 62

4. திருவெம்பாவை.
வித்துவான், திரு. மு. ஆறுமுகதேசிகர் அவர்கள்,
தருமபுர ஆதீன நூல்நிலைய மேற்பார்வையாளர். 66

5. திருவிரட்டைமணிமாலை.
வித்துவான், திரு. ச. தண்டபாணிதேசிகர் அவர்கள்,
தமிழாசிரியர், போர்டு உயர்தரப்பள்ளி, திருவாரூர். 69

6. தெய்வமணக்குஞ் செய்யுள்.
திரு. திருஞானசம்பந்தமுதலியார் அவர்கள்.
தேவஸ்தான ஓதுவார், வலிவலம். 72

7. திருவைந்தெழுத்தின் பெருமை.
வித்துவான், திரு. G. சுப்பிரமணியப் பிள்ளை அவர்கள்,
M.A., B.L., தமிழ் விரிவுரையாளர், அண்ணாமலைப்
பல்கலைக்கழகம், அண்ணாமலைநகர். 76

8. திருவுந்தியார் உரைநடை.
திரு. க. வச்சிரவேல் முதலியார் அவர்கள், B.A., L.T.,
பச்சையப்பன் உயர்தரப் பள்ளி, காஞ்சிபுரம். 79

9. சைவர் மகாநாடு. 82

10. The Four Paths —
Late J. M. Nallaswami Pillai B.A., B.L. 87

11. The Gleanings From Saiva Siddhantha—
Sri. R. Shanmukhasundaram Chettiar,
Madras. 90

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

குருபாதம்

# ஞானசம்பந்தம்

பொன்றயங் கிலங்கொளிந் நலங்குளிர்ந்த புன்சடை
பின்றயங்க வாடுவாய் பிஞ்ஞகா பிறப்பிலீ
கொன்றையம் முடியினாய் கூடலால வாயிலாய்
நின்றயங்கி யாடலே நினைப்பதே நியமமே. (திருஞா-தே)

திருச்சிற்றம்பலம்

## ஞானசம்பந்தம்

ஞான சம்பந்தம் என்னும் மந்திரமாகிய இவ்விரு சொற்கள் மேல்நிலை யுணர்வுத் தொடர்பு அல்லது உண்மையறிவுத் தொடர்பு எனப்பொருள் தருவதாகும். எனினும் பொதுவகையில் ஞானமென்பது அறிவு என்னும் பொருளையுங் குறிக்குமாதலால் இப்பரந்த நிலவுலகத்து வாழ்கின்ற எல்லாவுயிர்களுக்கும் இவ்வறிவுத் தொடர்பு இன்றியமையாது வேண்டப்படுவதே ஆம். இவ்வறிவுத் தொடர்பு இல்லாத பொருள்களையே நாம் சடப்பொருள்கள் என்று கருதுகின்றோம்.

இவ்வறிவுத் தொடர்பினாலன்றோ உலகத்துப் பல வகையாய் விரிந்து காணும் எண்ணெண் கலைஞானங்களும், பற்பல அணிகலங்களும், நாகரிகங்களும் மேன்மேலுமுண்டாகக் காண்கிறோம். இவ்வறிவுத் தொடர்பு க்களிடை வளரவில்லையேல் இவ்வுலகு இத்துணைச் றப்புடையதாய் மிளிர்தல் அரிதாகும் என்றே கூற ம். ஆனால் மேற்கூறிய உண்மை ஞானத் தொடர்பு

உயிர்களுக்கு உண்டாவதற்கு பல்லாயிரம் ஆண்டு களும், பல்லாயிரம் பிறவிகளும் வேண்டப்படுகின்றன.

அஃதாவது உற்றறிதலாகிய ஓரறிவு முதலாய்த் தொடங்கி மெய், வாய், கண், மூக்கு, செவி என்னும் ஐம்புலனறிவு உண்டாகும். அப்போது அவ்வுயிர் அஃறிணை எனப்படும்.

அதன்மேல் மனஉணர்வு எனப்படும் பகுத்தறி வாகிய ஆறுவது அறிவுடைய மனிதப்பிறவியில் வரு கின்றது. அப்போது அவ்வுயிர் உயர் திணை எனப்படும்.

இவ்வாறு படிமுறையாய் நால்வகைத் தோற்றத்து எழுவகைப் பிறப்பையுங் கடந்து மனிதப்பிறவியில் வருவதற்கு எண்பத்துநான்கு நூறு ஆயிரம் பிறவிகள் எடுத்து உழல்கின்றன, உயிர்களெனப் பெரியோர்கள் கூறுகின்றனர்.

உயிர்களுக்குப் படிமுறையில் வளர்ந்து வந்த ஆறுவது அறிவெனப்படும் பகுத்தறிவும் மூன்று வகைப்படும். உலகை அறிவது என்றும், தன்னை அறிவது என்றும், தலைவனை அறிவது என்றும் சொல்லப்படும். இவைகளைப் பாச அறிவு, பசு அறிவு, பதி அறிவு என்னலுமாம்.

**பாச அறிவாவது:** உலகையும் உயிரையுந் தொழிற் படுத்தும் தலைவனையும் தன்னையும் மறந்து, உயிர்க்கு அந்நியமாயுள்ளதும் நமக்கே ஒருகால் விருப்பமாயும் மற்றொருகால் வெறுப்பாயும் தோன்றுகின்ற நிலையுத லில்லாத உலகப் பொருளையே பொருளென மதித்து சின்னாட் பல்பிணிப்படும் உடலிடத்துப் பற்றுவைத்து மயங்கி நிற்பதாம்.

**பசு அறிவாவது:** இவ்வுடலிடை உயிர் உண்டென உணர்ந்தும் உயிர்க்குயிராய் நிற்கும் தலைவனை யறியா உயிர்க்காவன செய்யாது உயிர்க்கே ஒருகால் உ வாகியும் பகையாகியும் வருகின்ற உயிர்ப் பொருள்க

அபிமானித்து அதுவே துணையென நினைந்தும், தாமே எல்லாவற்றையும் அறியும் ஆற்றலுடையேம் என நினைந்தும், மாறுபடுகின்ற ஐம்புலனுக்கு ஆவன செய்தும், பாசநூற்கல்வி, தறுகண், சிற்றினம், சிறு புகழ் முதலியவற்றையே பொருளென மதித்தும் மயங்கி நிற்பதாம்.

இவ்விரண்டு அறிவும் அவாவின்வழி உலகப் பொருளை மதித்தலால் பாச அறிவென்றும், உடற்கண் உயிர் உண்டென அறிதலால் பசு அறிவு என்றும் சொல்லப்பட்டன. இவ்விரண்டு அறிவோடும் நிற்கும் நிலை மனிதப் பிறப்பில் வந்திருப்பினும் மக்கட்குரிய உண்மையறிவின்மையால் அஃறிணையாய்க் கருதப் படும். தொல்காப்பியர் "உயர்திணை யென்மனார் மக்கட் சுட்டே அஃறிணை யென்மனார் அவரல பிறவே" என்றார்.

**பதி அறிவு** தான் சிறிதளவு உண்மையை அறியத் தலைப்படுகின்றது. அஃதாவது உலகத்துக் காணப் படும் பல்வகைப்பட்ட உடற் பகுதிகளெல்லாம் சடமா யிருத்தலாலும் இளமை, பிணி, மூப்பு எய்துதலாலும், உயிர் உடலோடு கூடிக் கருவியாலும், காலத்தாலும், பொருளாலும், அளவாலும், நூல்களாலும், இருமுது குரவர்களாலும், ஆசானலும் அறிவிக்க அறிந்து வரு தலாலும், இவ்விரிந்த உலகையும் உயிர்களையும் சேர்த் துத் தொழிற்படுத்துகின்ற பேராற்றலுடைய ஒரு கடவுள் உண்டென உரையாலும், அனுபவத்தாலும், யுக்தினலும் கண்டு துணிந்தும், இம்மூன்றாகிய கடவுள் உயிர், உலகு (பாசம்) ஆகிய இவைகளின் வேறு பாட்டையும் உண்மைகளையும் அறியாது மயங்கி நிற்பதாம். இவ்வறிவு கடவுள் உண்டெனத் துணித லால் பதி அறிவு எனப்பட்டது.

மத்தக் களிறெனும் அவாவிடைப் பிழைத்தும்
பல்வரம் பாய பலதுறை பிழைத்தும்
செல்வ மென்னும் அல்லலிற் பிழைத்தும்

கல்வி யென்னும் பல்கடல் பிழைத்தும்
தெய்வ மென்பதோர் சித்தமுண் டாகி.

—மாணிக்கவாசகர்.

இதன் பிறகுதான் உயிருக்கு உண்மை ஞான மெனப்படும் அறிவுத்தொடர்புண்டாகிறது. எனவே இவ் ஞானமும் மூன்று வகைப்படும். அஃதாவது பாச ஞானம், பசு ஞானம், பதி ஞானம், என்பனவைகளாம்.

எண்ணில் உயிர்களை அநாதியாகிய ஆணவ மலத் தொடர்பு நீக்கி பேரின்பம் துய்க்கும்படி செய்யவே உடலோடு கூட்டப்படுகின்றது என்றும், இன்பதுன் பங்கள் முற்பிறவிகளிற் செய்த நல்வினை தீவினை கட்குத் தக்கவாறு வந்து சாருகின்றன என்றும், உயிர்களாகிய நமக்கு ஒன்றும் சுதந்தரமல்ல வென் றும், நம்முயிர்க்கு உயிராய் நிற்பதும் உயிர்க்கு உடனாய் நின்று அறிவிப்பதும் இறைவனே என்றும், நாம் தன்னையும் அறியாது நின்று அவன் அறிவிக்க அறிந்து வருகின்றோமென்றும், உயிர்க்குத் துணையா யுள்ள பொருள் அவ்விறைவனையன்றி ஒன்றுமில்லை யென்றும் உணர்ந்து அவன் தரும் உண்மைப் பதி ஞானத்தால் அவ்விறைவனையே விடாது தொடர்ந்து பற்றிக் கைமாறு கருதாது பேரன்புகொண்டு அவனது திருவருளையே நாடி. உயர்பரத்தில் நிற்கும் ஞான நிட்டை முதலியனவாம்.

பாசமா ஞானத் தாலும் படர்பசு ஞானத் தாலும்
ஈசனை உணர வொண்ணு திறைஅருள் ஞானம் நண்ணித்
தேசுறும் அதனல் முன்னைச் சிற்றறி வொழிந்து சேர்ந்து
நேசமோ டுயர்ப ரத்து நிற்பது ஞான நிட்டை.

என்றார் உமாபதிசிவம். எனவே எல்லா அறிவு ஞானங்களுக்கும் முடிபும் பயனுமாய் நின்றது மேற் கூறிய ஞானசம்பந்தர் என்னும் மந்திரமாகிய சொற் றொடராகும்.

(வரும்)

திருமாற்பேற்றுத்

# திருப்பதிகவுரை

[வித்துவான், திரு. ஔவை. சு. துரைசாமிப் பிள்ளை அவர்கள்]

(10-ம் பக்கத்தொடர்ச்சி)

10. தூசு போர்த்துழல் வார்கையில் துற்றுறா
நீசர் தம்முரை கொள்ளெலும்
தேசமல்கிய தென்திரு மாற்பேற்றின்
ஈச னென்றெடுத் தேத்துமே.

**உரை:-** ஆடையால் தேகத்தை மூடித்திரியும் புத்தர்களும், கையில் உணவுண்ணும் இழிஞராகிய சமணர்களும் என்ற இப்பரசமயவாதிகளுடைய உரைகளைப் பொருளெனக் கொள்ளாதீர்கள்; புகழ்நிறைந்த அழகிய திருமாற்பேற்றின்கண் எழுந்தருளிய ஈசனே என்று எடுத்துக்கூறித் துதிப்பீர்களாக.

தூசு=ஆடை. துற்று=உணவு. நீசர்=ஒழுக்கம் குறைந்தவர். கொள்ளேல் என்பது கொள்ளெல் என விகாரம். உம்மை, இசைநிறை. தேசம்—புகழ். இது வடசொற்சிதைவு.

சமணர்க்கு ஆடைகிடையாதாகையால் தூசுபோர்த்துழல்வார் என்றது புத்தர்களையாம். "ஆடையொழித் தங்கமணே திரிந்துண்பார்" (திருநணா) எனப்பிள்ளை சுவாமிகள் கூறுமாறு காண்க. "சமணர் சுவேதாம்பரர், திகம்பரர் என இருவகைப்படுவர். தென்னாட்டில் சம்பந்தர் காலத்தில் மிக்குத் திரிந்தோர் திகம்பர முனிவர்களே. ஆடையின்றித் திக்கையே அம்பரமாக (ஆடையாக) உடுத்திருந்தனராதலின், 'அவரை வெற்றரையுழல்வர்' எனப்பலவிடத்தும் குறித்துச் சொற்றனர் அப்பரும் சம்பந்தரும். சுவேதாம்பர முனிவர்கள் வெள்ளாடை யுடுப்பவர்," என்று சைவத்

திரு. ச. சச்சிதானந்தம் பிள்ளையவர்கள் கூறுகின்றார்கள். ஆனால், இங்கே குறித்த தூசுபோர்த்துழல்வார் என்பது புத்தபிக்ஷுக்களையும், சமண சுவேதாம்பரார் களையும் குறிக்குமாயினும், "கையாலுண்டுழல்வாரும் கமழ்துவாராடையினாற்றம், மெய்போர்த் துழல்வாரும்" என்றும், "துவருருவிரிதுவராடையர் வேடமால் சமண ரென்றும், அவருறு சிறுகொலை அவமென நினையும்" என்றும் பிள்ளையார் பிரூண்டும் புத்தர்களையே உரைத்தலால் புத்தர்களையே கொள்க.

புத்தரும் சமணரும் கூறுவனவற்றைக் கொள்ள வேண்டாவெனக் கூறியவர், இனி மக்களாற்கொண்டு கூறக் கடவது கூறுவார், "திருமாற்பேற்றீசன் என்று எடுத்தேத்துமே" என்கின்றார்.

புத்தரும் சமணரும் பலநாடுகட்குச் சென்று தம் சமயக் கருத்துக்களையும் ஒழுக்கங்களையும் தெரிவித்துப் புகழ்பரப்பி வருவதுகண்டு, மக்கள் மயங்கி அவர் கூறுவனவற்றைக் கொள்ளாவாறு, நிலவுலகு முழுதும் பரவிய புகழ் பரமனுக்கு உண்டென்று கூறித் தெளி விப்பார் "தேசமல்கிய தென்திருமாற்பேற்றின் ஈசன்" என்றார். தேசம் மல்கிய ஈசன் என்க.

"எடுத்தேத்துமே" என்றார் பரசமய வாதிகள் வாயடங்கித் தம்முடைய நெறியும், ஒழுக்கமும் இவர் பாற் செல்லா எனக்கருதி நீங்குவர் என்றற்கு. ஏத்தும், உம்மீற்று முன்னிலைப் பன்மை வினை முற்று.

"கொள்ளலும்" என்பது பாடமாயின். உம்மையை இசை நிறையாகவும், கொள்ளல் என்பதனை, அல்லீற்று எதிர்மறை வியங்கோளாகவும் கொள்க. "மாற்பேற் றீசன்" என்ற பாடம் தாளவறுதியொடுபடாது. இசை குன்றுதலின் பாடமன்மை யுணர்க.

11. மன்னி மாலொடு சோமன் பணிசெயும்
மன்னும் மாற்பேற் றடிகளை
மன்னு காழியுள் ஞானசம் பந்தன்சொல்
பன்னவே வினை பாறுமே.

**உரை:-** பெருமையினையுடைய திருமாலுடன் சந்திரன் தொண்டு புரியும் பெருமை பெற்ற திருமாற்பேற்றில் எழுந்தருளியுள்ள பரமனை, நிலைத்த சீகாழிப் பதியிற் பிறந்த ஞானசம்பந்தன் பரவிச் சொல்லிய திருப்பாசுரங்களைச் சொல்லிப் பரவினால் பரவுவோர் வினை தொடர்பற்று நீங்கிவிடும்.

மன்னி, இகரம் பகுதிப்பொருள் விகுதி. பணி செயுமாற்றால் திருமாலும், சந்திரனும் ஒப்பாராயினும் தவத்தால் மாயோன் உயர்ந்தவனாதலின், "மாலொடு" என்பதில் ஓடு உயர்பின் வழித்து. தக்கனது சாபமேற்ற சந்திரன் அதனின் உய்தி பெறுமாறு இங்கே பூசித்தான் என்ப. மன்=பெருமை. "மன்னு காழி" யென்றார் உலகப் பெருவெள்ளக் காலத்தே, இக்காழிப் பதிமட்டில் நிலைபெற்றிருந்த சிறப்புக்குறித்து.

ஞானசம்பந்தருடைய சொல்லின் இசையும் பொருளும் சொல்லுவார் கருவி கரணங்களைச் சிவ பரம் பொருளின் திருவருட் பெருக்கில் திளைப்பித்தலின் அவை பசுபாசத் தொடர்பு அறுதலால் அவை சார்பாகத் தொடரும் வினைகள் அச்சார்பு பெறாமையின் கெட்டழியும் என்பார் "பன்னவே வினை பாறுமே" என்றார்.

திருச்சிற்றம்பலம்.

திருச்சிற்றம்பலம்

# சொற்றுணை வேதியன்

[வித்துவான், திரு. K. M. வெங்கட்டராமையா
அவர்கள், M. A., B. O. L.,]

வீட்டின்கண் உள்ள இருட்டைப் போக்குவது சிறு விளக்கு. உலகத்திலுள்ள புறவிருளைப் போக்குவது சூரிய சந்திரர்களாகிய பெருவிளக்கு. ஆனால் மக்களின் மனவிருளைப் போக்குவது சுயம்பிரகாசமுள்ளதாகிய நமச்சிவாய வென்னும் விளக்கே யாகும். பலரும் காண்பதாகிய சூரிய சந்திரர்களாகிய சுடர்களும் இறைவனை யின்றியமையா வாகலானும், அச்சுடர்கள் புறவிருளைப் போக்குவனவே யன்றி அகவிருளைப் போக்காமையானும் **'நல்லக விளக்கது நமச்சிவாயவே'** என்றார்.

சிவ நெறியை 'முன்னெறி' என்றும் 'முதல்வன் முக்கணன் தன்நெறி' என்றும், 'அந்நெறியே சரணாதல் திண்ணமே' என்றும் 9ம் திருப்பாசுரத்திற் கூறப்பட்டது. அப்பர் தூய சிவனன்நெறியைச் சார்ந்தமையைச் 'சிவபெருமான் திருவடியே சேரப் பெற்றோம்' என்று மறுமாற்றத் திருத்தாண்டகத்தும், 'கெடிலப் புனலுடையார் ஒருவர் தமர் நாம்' என்று யானை ஏவிய காலத்துப் பாடிய பதிகத்தும் கூறி யிருப்பினும் இப்பதிகத்து மீண்டும் 'அந்நெறியே சரணாதல் திண்ணமே' என்று கூறியதன் கருத்து யாதோ எனில்? எம்போன்ற அறிவிலிகளும் இன்னும் சிவபெருமானைத் தெளியாராகி இருப்பின் அவர்களும் இனியேனும் சரண்புகுக என்ற நோக்கத்தானும், பிறவிடங்களில் பின்னர்க் கூறுவதுபோல 'போற்றாதே ஆற்றநாள்' போக்கியதால் பன்முறை சொல்லிச் சொல்லி மனம்

ஆறுதலடையும் பொருட்டுமாகும். சேக்கிழாரும் 'ஆழ் கடல் புக்க உறைப்புடை மெய்த்தொண்டர்' என்று அருளிச்செய்தனர்.

சைவத்திறத்தை யடைந்தவர் சரியை, கிரியை, யோகம் பயின்று சிவஞானத்தை யடைந்து சிவனடியைச் சேர்வர். அத்தகைய சிவஞானம் விளங்கிய பொழுதும் ஆன்மாக்கள் திருவஞ்செழுத்தை உச்சரித்துக் கொண்டிருப்பதே 'நன்னெறி' என்று 'அந்நெறியே சென்றங் கடைந்தவர்க் கெல்லாம் நன்னெறியாவது நமச்சிவாயவே' என்ற அடிகளிற் குறித்தருளினர். இதனைச் சிவஞானபோதம் 9-ம் சூத்திரம் 3-ம் அதிகாரணத்திற் காண்க:—

"இவ்வான்மாக்களுக்கு ஞானம் பிரகாசித்தும் அஞ்ஞானத்தை வேம்புதின்ற புழுப்போல நோக்கிற்றை நோக்கி நிற்குமாகலின் அது நீக்குதற்கெனக் கொள்க."

'வேம்பு தின்ற புழு அதனை நீத்துக் கரும்பினிற் றலைப்பட்டு அதன் சுவை தெரிந்துழியும் பயிற்சி வயத்தான் முன்னர்த் தான் நோக்கிய வேம்பின் சுவையை நோக்கிநிற்குமாறுபோல, மேலையதிகரணங் களிற் கூறிப் போந்த சாதகங்களைச் செய்து முற்றிய ஆன்மாக்களுக்கு அச்சாதகங்களான் ஞானம் விளங்கி ஞேயம் காட்சிப்பட்ட விடத்தும் பயிற்சிவயத்தான் முன்னர்த்தான் நோக்கிய பாசத்தை நோக்கி நிற்குமாகலின், அந்நோக்கமாகிய வாசனையை நீக்குதற் குரிய சாதக மதுவாகலான் இனி இவ்விடத்து ஸ்ரீபஞ்சாக்கரத்தை விதிப்படி யுச்சரிக்க என்று மேற்கொண்டதெனக் கொள்க என்றவாறு.'

இத்திருப்பதிகத்து ஈற்றுப்பாடல் பல சுருதி கூறுமாறு அமைந்துளது. அப்பர் தேவாரத்து இவ்வொரு பதிகமே இவ்வாறு அமைந்தது போலும். 'நமச்சி

வாயப்பத்து, ஏத்தவல்லார்தமக்கு இடுக்கண் இல்லையே' இது பல சுருதி. சேக்கிழாரும் 'அற்றம்முன் காக்கும் அஞ்செழுத்து' என்றனர். இப்பதிகப் பெயரை இவ் வீற்றுப் பாடலில் 'நாப்பிணை தழுவிய நமச்சிவாயப் பத்து' என்று குறித்துள்ளனர். (நாப்பிணை=நாவான் இயன்ற சொல்மாலை).

'பொற்றுணை திருந்தடி பொருந்தக் கைதொழ', 'பூப்பிணை திருந்தடி பொருந்தக் கைதொழ' என்ற இவ்விரு அடிகளிலும் எம்பெருமான் திருவடிகளைத் 'திருந்தடி' என்றார். திருவடிப் பெருமையைத் 'திரு வடித் திருத்தாண்டகத்தும்' பிறவிடங்களிலும் காண்க. வாகீசர் இறைவன் திருவடியைக் 'குறைந்தடைந்தார் ஆழாமைக்காக்கும் அடி' (தமது குறைகளைச் சொல்லிப் பணிந்து அடைந்தவர் நரகத்தழுந்தா வண்ணம் காக் கின்ற திருவடி) என்று ஆண்டுக் கூறுதல் காண்க.

பரமனை வேதியன், சோதிவானவன், சங்கரன், முதல்வன், முக்கணன், மாதோர் பாகத்தான் என்னும் தொடர்களால் குறித்தருளினர்.

அப்பர் பெருமான் தாம் கடலில் மிதந்த வரலாற் றைத் திருநீலக்குடி திருக்குறுந்தொகையில் குறித் துள்ளனர். அப்பாடல் வருமாறு:—

"கல்லி னோடெனைப் பூட்டி அமண்கையர்
ஒல்லை நீர்புக நூக்கஎன் வாக்கினால்
நெல்லு நீள்வயல் நீலக்குடி அரன்
நல்ல நாமம் நவிற்றிஉய்ந் தேன்அன்றே"

ஸ்ரீபஞ்சாக்கரம் எனினும் திருவைந்தெழுத்து எனினும் ஒக்கும். இஃது தூல, சூக்கும, அதிசூக்கும பஞ்சாக்கரமெனப் பல திறப்படும். 'நமச்சிவாய' என் பது தூல பஞ்சாக்கரம். 'சிவாயநம' என்பது சூக்கும பஞ்சாக்கரம். 'சிவாயசிவ' என்பது அதி சூக்கும பஞ்சாக்கரம். இம்மூன்றனுள் திருவஞ்செழுத்து நிற்கு

முறை 'நமச்சிவாய' என்பது; ஓது முறை 'சிவாயநம' என்பது இப்போது முறையைச் 'சிவமுதலே யாமாறு சேறுமேல் தீரும், பவம் இது நீ ஓதும்படி' என்றதனல் உணர்க. இவ்வைந்தெழுத்தும் எவற்றைக் குறிக்கும் என்பதைச் 'சிவன் அருள் ஆவி திரோதம் மலம் ஐந்தும், அவனெழுத் தஞ்சின் அடைவாம்' என்றதனன் அறிக. திருவஞ்செழுத்தைச் 'சிம்முதலாய்' ஓதுவதேன் எனில் **'வா' 'சி'** அருளி **'ய'** வை வாழ்விக்கும்' என்றதால் அறிக. 'ந'ம் முதலாய் ஓதல் கூடாதோ வெனில்? கூடாது. ஏனெனில்? 'நம் முதலாய் ஓதில் அருள் நாடாது' 'ஆதி மல மிரண்டும் ஆதியாய் ஓதினல் சேதியா மும்மலமும் தீர்வாகா' என்றுள்ளமை காண்க. விரிவைத் திருவருட்பயன், உண்மை விளக்கம் முதலிய சித்தாந்த சாத்திரங்களில் காணலாம்.

கல்மிதந்த வற்புதத்தைச் சேக்கிழார் நாயனர் வாக்கினில் முகிழ்த்த முறை பின்வரும் செய்யுளில் புலப்படும்:—

"இருவினைப் பாசமும் மலக்கல் ஆர்த்தலின்
வருபவக் கடலில்வீழ் மாக்கள் ஏறிட
அருளுமெய் யஞ்செழுத்து அரசை யிக்கடல்
ஒருகன்மே லேற்றிடல் உரைக்க வேண்டுமோ"

இவ்வற்புதமே யன்றோ 'அந்தணரில் மேம்பட்ட' அப்பூதியடிகளாரையும் பிணித்தது. திங்களூர்ச் செழுமறைத்தலைவர் 'தம் தனயருடன் கூவல், குளம், தண்ணீர்ப் பந்தர்' முதலியவற்றுக்குத் திருநாவுக்கரசரது திருப்பெயரே இட்டுக் 'காண்டகைமையின்றியும் முன் கலந்த பெருங் கேண்மை'யராய்த் திகழ்ந்தனர். இதனைப் 'பொங்கு கடற் கன் மிதப்பிற் போந்தேறு மவர் பெருமை அங்கணர்தம் புவனத்தில் அறியாதார் யாருளரே' என்ற அப்பூதியடிகள் புராணத்தான் அறிக.

உ
குருபாதம்

# திருவெம்பாவை

(வித்துவான் திரு. மு. ஆறுமுக தேசிகர் அவர்கள்.)

"பெருந்துறை புகுந்து பேரின்ப வெள்ளம்
மூழ்கிய புனிதன் மொழிந்தவா சகமே
வாசகம்"

—சிவப்பிரகாசர்.

"மாணிக்கவாசகர் அறிவாற் சிவனே என்பது திண்ணம். அன்றியும் அழகிய திருச்சிற்றம்பல முடையார் அவர் வாக்கிற் கலந்திரந்து அருமைத் திருக்கையால் எழுதினார்"

—சுவாமிநாத தேசிகர்.

"திருவாசகத்திற் குருகாதார் ஒரு வாசகத்துக்கும் உருகார்" என்பது ஆன்றோர் வாக்கன்றோ. செந் தளிர்மா மலரோனும் திருமாலும் ஏனமொடு அன்ன மாகி அலைந்தும் காண முடியாத இறைவன் விண்புகழ் முடிமிசை மண்பொறை சுமந்தும், நீற்றெழில் மேனியில் மாற்றடிபட்டும் பாடும் பணியிற் செலுத்த, அப்பணியை மேற்கொண்ட மாணிக்கவாசக சுவாமிகளது மலர்வாயி னின்றும் பிறந்த திருவாசகமென்னுந் தீந்தேன் தன்னைச் செவிவழியே பருகுவார்க்குத் தொன்று தொட்டு வருகின்ற பிறவியாகிய கட்டினை நீக்கி, அல்ல லறுத்து ஆனந்தமாக்கும் ஆற்றல் வாய்ந்தது.

இத்தகைய சீர்மிக்க திருவாசகத்திலே காணப் படும் பதிகங்களுள் திருவெம்பாவை என்பது சிறப் புடையதொன்றாகும். இது இருபது பாக்களையுடையது. பாக்கள் ஒவ்வொன்றும் இறுதியில் எம்பாவாய் என்ற சொற்றொடர் கொண்டு முடிவதால் இப்பதிகம் இப் பெயர்த்தாயிற்று. இது திரு+எம்+பாவை என மூன்று சொற்களாலாகித், தெய்வத்தை வழிபடும் எமது பெண்

குழந்தைகள் எனப் பொருள்பட்டு நிற்கின்றது. பாவை என்பதனோடு ஆய் என்னும் விளியுருபு சேர்ந்து பாவாய் என ஆயிற்று.

மக்களுக்கு உரிய ஒரு ஆண்டு தேவர்களுக்கு ஒரு நாளாதலின் உத்தராயணம் தேவர்களுக்குப் பகற்கால மாகும். தக்ஷிணாயனம் இராக்காலமாகும். ஆகவே இராக்காலத்திற்கு முடிவுகாலமாகிய மார்கழித்திங்களே தேவர்களுக்கு வைகறைப் பொழுதாயிற்று. அக் காலமே தேவர்களும் மக்களும் ஒருசேர இறைவழி பாடியற்றும் காலமாதலின் திருவெம்பாவை மார்கழித் திங்கள் வைகறை வழிபாட்டிற்குச் சிறந்தது என்பது பெற்றாம்.

மார்கழித் திங்கள் வைகறையில் இறைவழிபாடு இயற்றும் பெண்மகளிர்கள் ஒன்பதின்மர் தம்முள் முறைவைத்துக்கொண்டு முன் ஒருவர் துயில் நீங்கி மற்றையவர்களை முறையே எழுப்பி அழைத்துக் கொண்டு செல்வதும், அவ்வொன்பதின்மரும் ஒருங்கு சேர்ந்து இறைவனது பெருமைகளைப் புகழ்ந்து பாடு வதுமாக இப்பதிகம் அமைந்துள்ளது. இதனை முதல் எட்டுப்பாடல்களில் முறையே "மாதே வளருதியோ" "போதார் அமளிக்கே நேசமும் வைத்தனையோ" "வந்துன் கடைதிறவாய்" "கண்ணைத் துயின்று அவமே காலத்தைப் போக்காதே" "படிறீ கடைதிறவாய்" "இன்னம் புலர்ந்தின்றோ ....... வந்தோர்க்கு உன் வாய்திறவாய்" "இன்னந் துயிலுதியோ ..... ..... என்னே துயிலின் பரிசு" "என்ன உறக்கமோ வாய் திறவாய்" என்ற என்ற குறிப்புக்கள் உண்மையும், மற்றைய பன்னிரு பாடல்களில் இன்மையும் மேற் கூறியதை தெளிவுபெறக் காட்டா நிற்கும்.

இனி அவ்வெட்டுப் பாடல்களிலும் மகளிர்கள் ஒரு வர்க்கொருவர் துயிலெழுப்பிய முறையையும், துயிலும் பெண்கள் மறுத்துக்கூறும் மொழிகளையும் காண்பாம்.

நாளை உங்களை நானேவந்து எழுப்புவன் என்று தம்முள் ஒவ்வொருவரும் கூறிச்சென்ற பெண்களுள் ஒருத்தி முன்னர் எழுந்து இரண்டாம் மகளிர் இல்லத்திற் சென்று "முதலும் ஈறும் இல்லாத சோதி வடிவான இறைவனை யாம் புகழ்ந்துபாடக் கேட்டும் வாள்போலும் ஒளிபொருந்திய கண்களையுடையாய் நீ உறங்குகின்றனையே! வாழ்த்தொலி உன்காதில் விழவில்லையோ? உன்செவி வலிய செவியா? எங்களது வாழ்த்தொலியானது தெருவின்கட்கேட்ட அளவிலேயே ஒருத்தி விம்மி விம்மி அழுது தன்னையும் மறந்து படுக்கையினின்றும் கீழே விழுந்து புரண்டு செயலற்றுக் கிடக்கின்றாள். அவள் நிலை அவ்வாறிருக்க நீ துயின்ற நிலையிலே யிருக்கின்றனையே! ஈதென்ன ஏ தோழீ" என்று சொல்லக்கேட்டு அவளும் துயில் நீங்கி வெளி வந்தாள்.

பின்னர் இருவரும் வேறொரு இல்லத்துக்குச் சென்று "அணிகளை அணிந்தவளே! இரவும் பகலும் எனது அன்பு இறைவனிடத்தில் செல்லுகின்றது என்று நீ கூறுவாய். இப்போது அவ்வன்பு எங்குச் சென்றது? பூம்படுக்கையினிடத்துச் செலுத்துகின்றனையோ? நாம் இறைவனைப்பற்றிப் பேசுகின்ற காலம் இவ்வைகறைப் பொழுதல்லவோ? (என்று கூற அதற்கு உள்ளிருந்த மாது) சீ சீ விளையாட்டுமொழிகளுள் இவையும் சிலபோலும், விளையாடி யேசுவதற்குரிய இடம் இதுதானோ? (என்றனள். அதற்கு வெளியே நின்றவள்) தில்லைச்சிற்றம்பலத்துள்ள ஈசனார்க்கு நம் அன்பு எவ்வாறிருக்கவேண்டும்? நாம் யார்" என்று கூற அதைக்கேட்டு உள்ளிருந்தமாது துயில் ஒழிந்து வந்தாள்.

(வரும்)

சிவமயம்

# திருவிரட்டை மணிமாலை

(வித்துவான், திரு. ச. தண்டபாணி தேசிகர் அவர்கள், திருவாரூர்.)

[23-ம் பக்கத் தொடர்ச்சி]

ஏறலா லேறமற் றில்லையே யெம்பெருமான்
ஆறெலாம் பாயும் அவிர்சடையார்—வேறோர்
படங்குலவு நாகமுமிழ் பண்டமரர் சூழ்ந்த
தடங்கடனஞ் சுண்டார் தமக்கு.

இச்செய்யுளில் நஞ்சினை உணவாகக்கொண்ட உமக்கு இடபத்தையல்லாமல் வாகனமாகக்கொள்ள வேறு யானை குதிரை முதலியன இல்லையோ என்று வினவுகிறார். இவ்வினா நீர் நஞ்சுண்டவராயிருப்பதால் நஞ்சும் பாற்கடலிலிருந்து எழுந்தது. உடனெழுந்தன உச்சிச்சிரவம் என்னும் குதிரையும், ஐராவதம் என்னும் யானையும். இவை எழுந்தும் நஞ்சினை மட்டும் ஏற்றுக்கொண்டது தேவர்களைக் காக்க ஆனதுபோல யானை முதலியன இருந்தும் இடபம் ஏறியது எங்களைக்காக்க ஆகலாம் என்ற விடையை எதிர்நோக்கியிருக்கிறது.

மற்றும், நாங்கள் அன்புள்ளத்தோடு உம்மை வந்தடைய நிற்கின்றோம். திருமேனியில் விளங்கும் பாம்புகள் ஒருவரையும் சாரவிடமாட்டா. அச்சத்தை விளைக்கும் மண்டையோடு ஒருபக்கம். வெள்ளை எலும்புகள் ஒருபக்கம். நீர் விரும்பி ஏறுகின்ற காளை ஒருபக்கம். நாங்கள் அச்சமின்றி அடைவது எப்படி? இக்கருத்துக்களைத் தெளிய விளக்கும் 'அன்பாலடைவதெவ்வாறு' என்ற பாடலும், அருளடைவார் உமது திருவடியை விரும்புகின்றனர். அலந்தார்க்குப் புகலிடமாவதும் அவ்வடியே. இன்பத்தை இயைவிப்பதும் அவ்வடியே. அத்தகைய அடி தோளும் முடியும் ஒடிய

இராவணனை மூரித்தது எப்படி? அறம்புரியும் அடி மறம்புரிந்தது எப்படி? என்ற கருத்து விளங்கநிற்கும் "அடித்தலத்தின்" என்ற பாடலும் மிக இன்பம் பயப்பனவாம்.

சிறப்பிற் சிறப்பாக, ஆண்மையும் பெண்மையுங் கடந்து அறிவாகாயத்திற்றிளைக்கும் அம்மையாரும் பெண்மை நிலையிற் பொருந்தி "இனிவார் சடையினிற் கங்கை யென்பாளை யங்கத்திருந்த, கனிவாய் மலை மங்கை காணிலென் செய்தி" என்று இறைவனை வினவுகிறார்கள். 'சங்கரனே' தேவரீர் திருச்சடையில் கங்கையை வைத்திருக்கிறீரே; அரையுடம்பாகிய அம்மைகண்டால் என்செய்வீர்? என்பது கருத்து. இதில் "கங்கை என்பாளை" என்பதை உற்றுநோக்குவோம். ஊரென்பது உறையூர் என்பதுபோலக் கங்கை யென்று சிறப்பித்துக் கூறப்படுபவளைச் சிரத்துக் கொண்டது அவளுக்குத்தந்த அதிக அன்பைக் காட்டுவதாகும் என்றும், உடலிற்பாதியான உமையம்மைக்கு இதனை ஒளிக்க முடியாது; உமையோ கனிபோன்ற வாயையுடைய பேரழகி; மற்றும் மலையரசன் மகள் அவள்கர்ணில் ஊடற்கலகம் உம்மால் தாங்கமுடியாது என்றும் நயப்பொருள்கள் தோன்ற சொற்களைக் கோத்திருக்கின்ற அழகு குறித்துணரத்தக்கன.

**பஞ்சாக்கரச் சிறப்பு:-** வேதநடுவாய ஸ்ரீருத்ரத்தில் நடுவில் பஞ்சாக்கரம் அமைந்திருப்பதுபோல இப் பெரும் பொருட் சிறுநூல் நடுவில் பத்தாம் பாடலாக அமைந்திருப்பது,

> "தலையாய ஐந்தினையும் சாதித்துத் தாழ்ந்து
> தலையாயினவுணர்ந்தோர் காண்பர்—தலையாய்
> அண்டத்தான் ஆதிரையான் ஆலால மூண்டிருண்ட
> கண்டத்தான் செம்பொற் கழல்"

என்ற பாடலாகும்.

இச்செய்யுள் ஐந்தெழுத்தின் சிறப்பினையும், அதனை அநுசந்திக்கும் முறையினையும், சாதித்தோர் அடையும் பயனையும் அறிவிக்கின்றது.

இதில் தலையாய ஐந்து என்றதால் பஞ்சாக்கரம் வேதத்தில் தலையாயது; மந்திரங்களில் தலையாயது; வேதக்கருவில் அமைந்து அதற்கே ஒளிகொடுத்து நிற்பது என்பன போன்ற பெருமைகள் அறிவிக்கப்படுகின்றன. அதனை அநுசந்திக்கும் முறையாவது 'சாதித்து' என்கிறார்கள். சாதனையென்பது பல்காற் பழகுதல் மட்டும் அல்ல; நான் மறக்கினும் நாசொல்லும் என்ற நிலைமட்டுமல்ல; கண்டகண்ட பொருள்களைச் சென்று பற்றி யதன் வடிவாகவே திகழும் மனமும் ஐந்தெழுத்தின் மயமாக இருத்தலே. இப்போது உலகியலிற்கூட பல இடையூறுகளுக்கு ஈடுகொடுத்துக் காரியத்தில் வெற்றி பெற்றவனைச் சாதித்துவிட்டான் என்கிறோம். அதுபோல உள்ளமும் ஐந்தன் வடிவாக அமைதல் வேண்டும் என்பதாம். அங்ஙனம் சாதித்தல் ("தாழ்ந்து") மலகன்மங்கள் தாழப்பெறும். அஃதாவது மலம் வலி தாழும். கன்மங் கெடும். பின்னர் மலத்தின் வாசனையுங்கூட அழியும். அவை தாழத் தலையாய சிறந்த பதிப்பொருள் காணப்பெறும். பின்னர் காண்பான், காட்சி, பொருள் வேறுபாடு அற்று ஒன்றியுணர்ந்த நிலையில் செம்பொற் கழலாகிய அருணிலை காணப்பெறும் என்று அதன் பயனும் விளக்கப் பெறுகின்றது.

ஆகவே திருவிரட்டைமணிமாலையை எம் அம்மையார், இறைவன் ஆன்மாக்களுக்குச் செய்யும் அருட்டிறத்தையும், அவரை அறிவில் ஆக்குமுறையையும், அஞ்செழுத்தின் நிலையினையும், சாதித்தார் சாரும் கதியினையும் நாம் உய்யக் கூறியருளி யிருக்கின்றார்கள். நாம் திருவருள் துணைக்கொண்டு ஊன்றிப் படித்து உளங்கொண்டு சாதித்து உய்வோமாக.

சிவமயம்

# தெய்வமணக்குஞ் செய்யுள்

(திரு. திருஞானசம்பந்த முதலியார், அவர்கள்.)

செந்தமிழ் மொழியின் வளப்பெலாம் ஒருங்கு திரண்டு, சைவ நல்லொளி வீசி ஞானப்பொருள்வளம் முற்றி, அருள்வளம் பழுத்து, சிவமணம் கமழ்ந்து, பத்தித் தனித்தேன் பெருக்கெடுத் தூற்றும் தெய்வத் திருவருட்காவியமாக இலங்குவது நந்தம் சேக்கிழார் பெருமான் இயற்றியளித்த திருத்தொண்டர் புராண மென்னும் பெரியபுராணமாம். இத்தெய்வத் திருவருட் காவியமானது, தில்லைத் திருச்சிற்றம்பலம் என்னும் சிதாகாச பரவெளியினூடெழுந்த இறைவனது 'உல கெலாம்' என்னும் அருளுரைவொலியின் அமுததாரை தோய்ந்தினிக்கும் அற்புதப் பொற்பாக்களால் ஆக்கப் பெற்றுப் பொலிவுறுவதாம். இதனைத் திருவருள் ஆணை வழி நின்று திருச்சிற்றம்பல மகாசந்நிதியரங்கிருந்து கேட்ட அநபாயன் என்னும் வளவர்பெருமான், இஃது இயற்றியருளிய சேக்கிழார்பெருமானார்க்குத் தொண்டர் சீர்பரவுவார் என்னும் சிறப்புப் பெயர் வழங்கி, இம்மா புராணத்தினைப் பதினொரு திருமுறைகளோடொன் றெனவைத்துப் பன்னிரண்டாந் திருமுறையாக்கி, இதன் தெய்வப்பெற்றிமை இற்றெனக்காட்டி நிலை நிறுத்தினான்.

திவ்வியம் பழுத்த சைவசித்தாந்த தெய்விக ஞானற் புத மெய்கண்டமரபு தழைய எழுந்தருளிய உமாபதி சிவாசாரியார் நம் பெருமானின் செந்தமிழியல்வளங் கொழிக்கும் செந்நாப் புலமையும், திருவருட் செல்வம் விஞ்சிய மறுவரு செம்மையும், தம்முள் துலங்க இலங்கும் அவரது மங்கல சின்மய மதுரத்தமிழ்ச் செம்பாடல்வாரி வளங்கண்டு 'தேவரு மெழுதவொணு மறையைத் தமிழ்

செய்து திருப்பதிகம் பாடும், மூவருமொரு முதலா யுல கத்து மூளைத்த முதற்பொருள் தாமென்பார்' என விதந்து இளக்குமாற்றான் அவர்தம் புண்ணிய நலத்தின் மிக்க பொருவரு நிலையை எண்ணி இசைத்தனர்.

சொல்விற்பனம் விளையும் மதுரக் களஞ்சியமென விளங்கிய நம் குமரகுருபர முனிவர் இம்மாபுராணத் துச் செய்யுளொன்றிற்கு (ஐந்து பேரறிவும்) அனுபவப் பயனறியாது மயங்கிய அவ்வற்புதச்செய்தி நம் பெரு மானின் சிவபோகக்கொழுந்தேறல் வாய்மடுத்துத் தேக்கிய சிவானந்தாநுபவ விளைவின் தெளிவைப் புலப்படுத்தி நிற்கின்றது. இச்சகலாகம பண்டித தெய் வச் சைவராகிய சேக்கிழார்மீது ஒரு பிள்ளைத்தமிழ் இயற்றிப் பேறுபெற்ற நல்லறிஞராகிய மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள் கருதித்தொகுத்த இவர்தம் மெய்ப் புகழ்க்கோர் எல்லையின்றாதல் நந்தமிழுலகு நன்கறிந்த தொன்றாம். 'பத்திச் சுவைநனி சொட்டச் சொட்டப் பாடிய கவிவலவ' என்னுமப்பிள்ளைத்தமிழ்த் தொடர் பின் முறையும் சுவைத்துச் சுவைத்துப் பாராட்டற் குரியது.

இங்ஙனம் மெய்யுணர் வெய்தித் தெய்வப் புலமை மிக்க நம் நாவலர் பெருமானது அருணலங்கனிந்து அமு தஞ்சொரியும் திட்ப நுட்பஞ் செறிந்த செஞ்சொற் கவி களின் செம்மை நலம் அளத்தற்கரியதொன்றாம். சொற் பொருள் நுட்ப திட்பங்களானும் இன்னோசையானும் எழில்சிறந்து விளங்கும் நலம்படு செய்யுட்களின் தீஞ் சுவை பெரிதும் பொதிந்து கனிந்து நற்றமிழ்ப் பிண்டத் தினை ஆசிரியர் தெய்வப் புலமைத் தொல்காப்பியனார் 'இழுமென் மொழியான் விழுமியது நுவலினும், பரந்த மொழியா னடிநிமிர்ந் தொழுகினும், தோலென மொழிப தொன்னெறிப் புலவர், என இலக்கண வகையாற் பாகுபடுத்தெடுத்துத் தமிழியல் வளத்தின் சிறப்பு மிக்க தோல் என்னும் வனப்பின்பாற்படுத்துக் காட்டுவர்'

இதனை 'மூவா முதலா வுலகமொரு மூன்றுமேத்த' என்றற்றொடக்கத்துச் சிந்தாமணிச் செய்யுளுரைக்கண் ஆசிரியர் நச்சினார்க்கினியர் "செய்யு ளியலின்கண்ணே ஆசிரியர் பா நான்கென்றும், அவற்றை அறம் பொரு ளின்பத்தாற் கூறுக வென்றுங் கூறிப், பின் அம்மை முதலிய எட்டும் தொடர்நிலைச் செய்யுட்கு இலக்கண மென்று கூறுகின்றுழி 'இழுமென் மொழியான் விழு மியது நுவலினும்' என்பதனால் மெல்லென்ற சொல் லான் அறம் பொருள் இன்பம் வீடென்னும் விழுமிய பொருள் பயப்பப் பழயதோர் கதைமேற் கொச்சகத் தாற் கூறின் அது தோல் என்று கூறினமையின் இச் செய்யுள் அங்ஙனம் கூறிய தோலா மென்றுணர்க" என நன்கெடுத்து விளக்கினர்.

நாநலங்கனிந்த இம்மெல்லோசையின்பம் யாண்டும் நிரம்பித் துளும்புமாற்றானும், வீடென்னும் விழுமியது பயக்கும் பழங்கதை கிளத்தலானும், தோல் என் னும் வனப்பு முழுதும் தழீஇ ஒளிவிட்டிலங்குவது நந் தம் பெரிய புராணமா மென்பது அப்புராணத்தினது எப்பகுதியாலும் இனிது நாட்டப்படுவதாம்.

உலகியலறிவும் திருவருட் பொலிவும் கலந்து பரந்து விரிந்த மனோபாவனையின் நல்வளம் பழுத்தெழுந்ததேம் பொதிகிளவிகளின் இன்னோசை கெழுமி இன்பவெள்ள மென ஊற்றெடுத்தோடும் இவர் தம் பெருமிதவளம் பல நிறைந்த நடைச் சிறப்பு மூக்குண வசத்தரான தமிழ்ப் புலவோர்க்கு வாய்ப்பப் பெறுதவொன்றாம். அந்நிலை யில் நம்பெருமான் தனிமுடிகவித் தரசாளும் சக்ர வர்த்தி யெனத் துலங்குகின்றார். இவர் தமது மாபுரா ணம், நவரசத் துறைமிக்குடைய நற்றமிழ்ப் பேரியாற் றின் நலம்படும் அமுதவெள்ளமென வயங்குகின்றது. சொற்சுவையோ தேனும் பாலும் உடன் கலந்தட்ட தேமாஞ்செழுங்கனித் தீஞ்சுவைத்திரளெனத் துலங்கு கின்றது, பொருட்சிறப்போ அருளானந்தப் பெருங்

கடலின் அலைவாயெழுந்த அமுதமயமா யிலங்குவது. இன்னோரன்ன நன்னலம் பெரிதும் துதைந்து மிளிரும் பெரிய புராண அருஞ்சிறப்புப் பாவினுமடங்கா நாவினு மடங்கா எனக் கூறல் மிகையாகாது. "புவியினுக் கணியா யான்ற பொருள்தந்து புலத்திற்றாகி, யவியகத் துறைகள் தாங்கி யைந்திணை நெறியளாவிச், சவியுறத் தெளிந்து தண்ணென் றொழுக்கமும் பயின்று சான்றோர், கவியெனக் கிடந்த கோதா வரியினை வீரர் கண்டார்" எனவருங் கம்பநாடர் கவிக்குச் சிறந்த எடுத்துக்காட்டாய் நின்றிலங்குவது நம்தம் பெரிய புராணமேயாம். செந்தமிழ் தெய்வப்புவியின் திகழ்தரு நித்தில வணியி னிலங்கி, சிவஞானமிக்க சிறப்பென்னும் செம்பொருள்பயந்து, நவில்தொறும் நவில்தொறும் நயம்பல காட்டும் பொருட்பரப்பின் மிக்க அருட்செம்புலம் வாய்ந்து, திருத்தொண்டர்களது கரும ஞான அருளொழுக்கங்களாம் அளவில்துறைகளேய்ந்து செந்தமிழ் நானிலத் தைந்திணை வளந்தழீஇய திணைப் பாகுபாடுகள் தோய்ந்து, முழுமணித் திரளென ஒள்ளொளிததும்பும் சொன்னலத்தெளிவது துலங்க, இறைவனது அருட்பெரு வெள்ளத் தண்ணளிவிளங்க, ஏழ் இசையி னியல் கொழிக்கும் குழலினும் யாழினும் மீக்கூர்ந்து இன்பமளிக்கவல்ல சொற்சுவை பழுத்தோடும் செய்யுளோசை யொழுக்கம் இழுமென வயங்க, எத்திசையும் புகழ்மணக்க இருந்துலவும் நம்பெரிய புராணத்திற் சிறந்த பிறிதோர் எடுத்துக்காட்டு அதற்கின்றாதல் கண்டு கொள்க.

(வரும்)

குருபாதம்

# திருவைந்தெழுத்தின் பெருமை

(வித்துவான், G. சுப்பிரமணியப் பிள்ளை அவர்கள், M.A., B.L.,
தமிழ் விரிவுரையாளர், அண்ணாமலைப் பல்கலைக்கழகம்.)

[27-ம் பக்கத் தொடர்ச்சி]

சிகாரத்திலும், வகாரத்திலும், நகாரத்திலும் சிவமும், அருளும், அருளின் கூறாகிய திரோதாயியும், அதற்குக் கருவியாகிய மாயைகன்மங்களும் நின்றன. யகாரத்தில் ஆன்மாவும் மகாரத்தில் மலமும் அமைந்தன. பதியின் பகுதியில் பாசத்தின் பகுதியாயிருந்த திரோத சத்தியைக் கூட்டியதென்னெனில், ஆன்மாவாகிய உயிரின் அறிவை மறைத்த ஆணவமலத்தைப் பாகம் வருவித்தல்வேண்டி அருளானது திரோதமாய் நின்று காரியப்படுத்துகையால், அதுவும் இறைவன் கூறேயாகும்.

> "இறைசத்தி பாசம் எழில்மாயை ஆவி
> உறநிற்கும் ஓங்காரத் துள்"

என்பது திருவருட்பயன். ஆகவே, இவ்வைந்து முதலும் ஐந்தெழுத்திலும் இவ்வாறு நிற்கவும், சிகாரம் முதலாக உச்சரிக்கும்பொழுது, சிவமும் அருளும் ஒரு பாலும், திரோதமும் மலமும் ஒருபாலுமாக முன்பின் சூழ்ந்து நிற்க, நடுவே நின்ற ஆன்மாவானது அந்த அருள் அறிவித்தால் அதனாலே அறிந்தும், மற்றமலம் மறைத்தால் அதனாலே மறைப்புண்டும், இங்ஙனம் இரண்டோடுங்கூடி ஒன்றுபட்டு அதுவதுவாய் நின்றாலும், தானொரு முதலாய் வருகிறது, அநாதியேயுள்ளது அதுவாகலின். அப்படியிருக்கவும், மகாரமாகிய மலமும் நகாரமாகிய திரோதசத்தியும் மேலிட்டு நின்றால் வகாரமாகிய அருளிலும், சிகாரமாகிய சிவத்திலும்

ஆசையற்று, ஆன்மா பிறப்பிறப்புத்துன்பத்திலே நின்றழுந்தும். அந்த மலத்தின் மயக்கம் நீங்கி அருளிலே ஆசையுடையவர்களுக்கு இத்திருவைந்தெழுத்தை உச்சரித்து உய்தல்கூடும். அனைத்தும் சிவசேட்டையாலொழிய முடியாதாகையாலே சிவத்தை முன்னிட்டு உச்சரித்தால் நகாரமாகிய திரோதசத்தியும் மகாரமாகிய மலத்தின் மேலீட்டை நீக்கி அருளாக நின்று ஒளிரும். பின்னர் அவ்வாறு மலத்தினின்றும் மீளவிட்ட வகாரமாகிய அருள் சிகாரமாகிய சிவத்தைத் தாராநிற்கும். அப்படி மலபாகம் வந்த புண்ணிய ஆன்மா முன் சொன்ன அருளே புணையாகச் சென்று சிவத்தோடுங் கூடி இரண்டற நின்று பேரின்பம் துய்க்கும்.

நகாரத்தை முதலாகக்கொண்டு நமசிவாய என உச்சரிப்பதைத் தூல பஞ்சாக்கரமென்றும், சிகாரத்தை முதலாகக்கொண்டு சிவாயநம என உச்சரிப்பதை சூக்கும பஞ்சாக்கரம் என்றும் கூறுவது மரபு. திரோதத்தைக் குறிக்கும் ந கா ர த் தை முதலாகக் கொண்டு நமசிவாய என்று உச்சரித்தால் மும்மலமும் நீங்கி ஆன்மா அருளைப்பொருந்திப் பேரின்ப வாழ்வையுறமாட்டாது. நகார முதலாக உச்சரிக்கும் முறைமையை மாறிச் சிவம் முன்னுக சிவாயநம என்று விதிப்படி உச்சரித்தால், அருளானது பொருந்தி, ஆன்மாவை மலவிருளினின்றும் நீக்கி இன்பவடிவான சிவத்தின் கண்ணே சேர்க்கும். தேவாரம், திருவாசகம் பாடியருளிய சமயாசாரியர்கள் தம்வடிவும் செயலும் சிவனிடத்து அன்பேயாய், உலகப்பற்றுக்களை அறவேயொழித்துச் சிவப்பிரகாசம் பெற்றிருந்த நிலையில் திருவைந்தெழுத்தைச் சிகாரம் முதலாகவும் நகாரம் முதலாகவும் யாதொரு வேற்றுமையுமின்றியே ஓதிவழங்கினர் என்று நாம் கொள்ளுவதில் இழுக்கில்லை. மேலும் திருவைந்தெழுத்தாலே தொடங்கப்பட்ட திருவாசகத்திலே மாணிக்கவாசகர், "நமச்சிவாய வாழ்க" என்று சிவபுராணத்தை ஆரம்பித்துள்ளார். அது

புராணமாகையினாலும், உலகத்தின் படைப்பைப் பற்றிக் கூறப் புகுந்ததாதலாலும் உலகியலைக் குறிக்கும் முறையில் நமச்சிவாய என்று கொண்டார் என்னலாம். ஆயினும் பின்னால், 'நானேயோ தவஞ்செய்தேன் சிவாயநம எனப் பெற்றேன்'' என்று பெருமகிழ்வெய்திப் பாடுகின்றார். சித்தாந்த நூல்களின் கொள்கைப்படி **நமசிவய** என்பது உலகியலைக் குறித்துப் போகத்தை அளிப்பது. **சிவயநம** என்பது வீட்டியலில் உய்த்து முத்தியை அளிப்பதாகும்.

> "சிவனருள் ஆவி திரோதமலம் ஐந்தும்
> அவனெழுத் தஞ்சின் அடைவாம்—இவனின்று
> நம்முதலா வோதிலருள் நாடாது நாடுமருள்
> சிம்முதலா வோதுநீ சென்று."

என்பது உண்மை விளக்கம்.

திருவைந்தெழுத்தானது ஓம் என்னும் மூல மந்திரத்துடன் பொருந்திய சிவாயநம என்னும் ஐந்து எழுத்துக்களாகும். ஓம் என்னும் பதமானது அ, உ, ம், என்னும் மூன்று எழுத்துக்கள் சேர்ந்ததொன்றாகும். இம்மூன்று எழுத்துக்களோடும் விந்து, நாதம், எனும் இரண்டும் கூடியதே திருவைந்தெழுத்தாகும். அவ்விதம் அமையும் முறையும் தெரிந்துகொள்ள வேண்டியதொன்று. சிகாரத்தில் அகாரமும், வகாரத்தில் உகாரமும், யகாரத்தில் மகாரமும், நகாரத்தில் விந்துவும், மகாரத்தில் நாதமும் என இவ்வாறு அமைந்து நிற்கும்.

(வரும்)



# திருவுந்தியார் உரைநடை

[காஞ்சிபுரம், திரு. க. வச்சிரவேல் முதலியார் அவர்கள், B. A., L. T.]

(36-ம் பக்கத்தொடர்ச்சி)

## எட்டாவது உந்தியார் *

தன் சொரூபத்தை நிலமுதல் நாத மீருன தத்துவங்களினீக்கி யறிந்தாரே தலைவனைக் காட்டும் திருவருளைக் காணப்பெறுவ ராகலானும், அங்ஙனம் அவற்றைத் தனித்தனிச்சுட்டி நீங்குதல் யோகக் காட்சியாற் கூடற்பாலதாகலானும், இவ்வாற்ருன் ஞானநிட்டையை எய்துவிக்கும் சிவயோகத்தினியல்பும், அதனுல் ஞானநிட்டையை எய்துமாறும் 8-முதல் 20-வரையுள்ள உந்தி களான் உணர்த்தப்புகுந்து, இவ்வெட்டாம் உந்தியால் சிவ யோகத்தின் வகையும், அதன் இன்றியமையாமையும் உணர்த்து கின்ருர்.

பொழிப்பு:- முன்னர் ஆதாரயோகத்தைப் பயின்று, அது முற்றியபின்னர் நிராதார யோகத்தில் நின்று, அதனுல் மீதானம் எனப்படும் திருவருளாகிய இடத்தைத் தலைப்படுக. அஃது அநாதியே அமலனுகிய முதல்வனது இடம் என அறிக.

குறிப்பு:- 1. இங்ஙனம் கூறவே ஆதாரம், நிராதாரம் எனச் சிவயோகம் இருவகைப்படும் என்பதும், அவை திரு வருளைத் தலைப்பட முயல்வார்க்கு இன்றியமையாது வேண்டப்படும் என்பதும் பெறப்படும். இங்கு மீதானம் என்றது நின்மலதுரிய நிலைக்கண்ணதாகிய சிதம்பர அநுணிலையை. இதுமேல் 17-ம் உந்தியில் "நிருத்தனைக் கும்பிடு" என்பதனுனும் விளங்கும்.

2. "தன்னை யறியாது சகந்தானுய் இருந்துவிட்டால் — உன்னை யறிய அருள் உண்டோ பராபரமே", "யோகியர்க்கே

---

* ஆதாரத் தாலே நிராதாரத் தேசென்று
மீதானத் தேசெல்க வுந்தீபற
விமலற் கிடமதென் றுந்தீபற.

ஞானம் ஒழுங்காம்'' என்னும் தாயுமானுர் தம் அநுபவ வாக்குக்கள் ஈண்டுச் சிந்திக்கற்பாலன.

### ஒன்பது, பத்தாவது உந்திகள் *

இவற்ருன் ஆதார யோகத்தின் வகையும், இயல்பும் உணர்த்துகின்ருர்.

**பொழிப்பு:-** (நூல்களில் விதித்தபடி) மனத்தால் உருவங்களைக் கற்பித்து நினைத்தபோதுள்ளதாய், நினையாதபோதில்லதாய்க் கருதப்படுவது பரம் என்னும் வகையின் பாற்படாது; (தூல சூக்குமங்களின்பாற் படும்) இத்தகைய பாவனை நிராதாரத்தின்பாற் செலுத்தாது. (9)

குறிப்பு:- 1. இதனுல் ஆதார யோகம் தூலம், சூக்குமம், பரம் என மூவகைப்படும் என்பதும், அவற்றுள் முன்னைய இரண்டும் பாவனை மாத்திரையாற் செய்வன என்பதும், இறுதிக்கண்ணது உண்மையாற் செய்வது என்பதும் பெறப்படும். தூலம், சூக்குமம் என்னும் வகைகள் திருக்களிற்றுப்படியாரில் முறையே 'ஆக்கியொரு பொருளை' 'கொண்டதொரு பொருளை' என்னும் வெண்பாக்களால் தெரித்துணர்த்தப்படுகின்றன. 'பார்க்கில் அது பரம் அன்று' என உரைநடை செய்துகொள்க. பரம்-அதிசூக்குமம்.

2. இனி இவ்வாறன்றிப் பரம் என்ற சொற்கு மேலானது எனப் பொருள்கொண்டு, உருவங்களைக் கற்பித்துக் கருதுவது மேலான உண்மை யோகமன்று, உபாய யோகமே யென்றுரைப்பினும் பொருந்தும்.

**பொழிப்பு:-** நுட்ப ஐந்தெழுத்துக்களே ஆங்கார முதலிய ஐந்தனையும் செலுத்துவனவாக, அதனை அறிந்து வருவதே உன் அறிவென உணர்ந்திரு.

* ஆக்கிலங் கேயுண்டா யல்லதங் கில்லையாய்ப்
பார்க்கிற் பரமதன் றுந்தீபற
பாவனைக் கெய்தாதென் றுந்தீபற. (9)

அஞ்சே யஞ்சாக வறிவே யறிவாகத்
துஞ்சா துணர்ந்திருந் துந்தீபற
துய்ய பொருளீதென் றுந்தீபற. (10)

கரணங்களை விட்டு அவற்றை வேறாக அறியும்போது கேவலம் வந்து கூடாமைப் பொருட்டு அவ்வெழுத்துக் களை யதிட்டிக்கும் காரணக்கடவுளரிடம் நின்று செலுத்தும் முதல்வனது சிற்சத்தியைத் தாரகமாகக் கொண்டு நில். தூய பொருளாகிய அம்மையப்பரைக் காண்டற்குறிய நெறி யிதுவே. (10)

குறிப்பு:- 1. நிராதாரத்தின்பாற் செலுத்துவதாய் உண்மையான் நிகழும் 'பரம்' என்னும் வகையை யுணர்த்தியபடி பொருள்களைச் சவிகற்பமாக அறியும்போது ஆன்மா காலம், நியதி, கலை, வித்தை, அராகம் என்னும் பஞ்சகஞ்சுகனாய்ப் புருடனென நின்று மனம், புத்தி, சித்தம், அகங்காரம் என்னும் அகக் கருவிகள் நான்கானும் அறிந்துவரும். அங்ஙனம் அறிந்துவரும் போது அகங்காரம், புத்தி, மனம், சித்தம், புருடன் என்பன முறையே அ, உ, ம, விந்து, நாதம், என்னும் நுட்ப ஐந்தெழுத்துக்களாற் செலுத்தப்படுகின்றன. இவ் வெழுத்துக்களை அதிட்டிக்கும் அயன், மால், உருத்திரன், மகேசன், சதாசிவன் என்பவரே காரணக்கடவுளர் எனப் படுவர். ஐம்பொறி முதலியனவும் இங்ஙனமே இவ்வெழுத்துக் களாற் செலுத்தப்படுவனவே. இவ்வாற்றானறிந்து வருமான்மாத் தன்னைக் கருவிகளின் வேறாகக் காணும்போது மேற்கூறிய நுட்ப ஐந்தெழுத்தாய் நின்றறிந்து வருவதாய்க் காணப்படும். இதனை அநுபவமாகக் காண்டலே 'பரம்' எனப்படும் ஆதாரயோகமாம் என்க. மெய்கண்டதேவரும் "அன்றன் றெனநின் றனைத்தும்விட் டஞ்செழுத்தாய்-நின்றான் றுளததுவே நீ" * என்றருளிச்செய்தமை காண்க.

இனி, இதற்குமேல், அவ்வைந்தெழுத்தை அதிட்டிக்கும் காரணக்கடவுளர்மாட்டுவைத்து நடத்தும் திரோதான சத்தியோடு உடனாய்நின்று, தன்னை அவ்வெழுத்துக்களின் வேறாய்க்காணும் நிலையே மீதானத்துச் செலுத்தவல்ல நிராதார யோகமாகும்.

2. 8, 9, 10-ஆம் உந்திகளின் கருத்தை விளக்குவன "ஆதாரயோகம்" என்பதுமுதல் "அஞ்செழுத்துமே" என்பது வரையுள்ள வெண்பாக்கள் (களிறு. 22–25). (வரும்)

* சிவஞா போ. சூ. 3, அதி. 1. உதா, வெண்பா.

## சைவ சித்தாந்த மகாசமாஜம்

## 37-வது ஆண்டு நிறைவு விழா

# சைவர் மகாநாடு

சைவ சித்தாந்த மகாசமாஜத்தின் 37-வது ஆண்டு நிறைவு விழாவும், அதன் சார்பில் சைவர் மகாநாடும் சீகாழிப்பதியில் நிகழும் சித்திரபானுஸு மார்கழிமீ 10, 11, 12 ஆகிய மூன்று நாட்களிலும் மஹாமஹோபாத்யாய பண்டிதமணி திரு. மு. கதிரேசச் செட்டியார் அவர்களின் தலைமையில் மிகச்சிறப்பாக நடைபெற்றது. அதுகாலை முதனுள் தருமபுர ஆதீனம் ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானத்தில் அருளிச் செய்த திறப்புரையை மகாசந்நிதானத்தின் திருவுளப்பாங்கின்படி ஆதீனத் திருக்கூட்டத்தம்பிரான் சுவாமிகளுள் ஒருவராகிய ஸ்ரீமத் அருணந்தித் தம்பிரான் சுவாமிகள் அவர்கள் வாசித்து மகாநாட்டைத் திறந்து வைத்தார்கள். அத்திறப்புரை வருமாறு:—

திருச்சிற்றம்பலம்

நன்னெஞ்சே யுனையிரந்தேன் நம்பெருமான் திருவடியே
உன்னஞ்செய் திருகண்டாய் உய்வதனை வேண்டுதியேல்
அன்னஞ்சேர் பிரமபுரத் தாரமுதை யெப்போதும்
பன்னஞ்சீர் வாயதுவே பார்கண்ணே பரிந்திடவே

—திருஞான.

திருச்சிற்றம்பலம்

## திருவும் கல்வியும் சீரும் புகழும் வாய்ந்த அன்பர்களே!

பழுதிலாத்திறம் பெற்ற சென்ற காலத்தினும் இற்றைநாள் சிறந்த நாளாகத் திகழ்கின்றது. எதனு லெனின், ஊர்பரந்த உலகில் முதலாகிய ஓரூர் இது என்னப் பேர்பரந்த பிரமாபுரமாகிய இந்தச் சீகாழி மாநகரமானது மன்னிய சைவத் துறையின் வழிவந்த குடிவளவர், பொன்னி வளந்தரு நாடு பொலிவெய்த நிலவியது. இந்த நகரஞ் செய்த மாதவத்தின் பயனுகச் சைவசமய பரமாசாரியர்களுள் முதல்வரான திருஞான சம்பந்தமூர்த்தி நாயனுர் திருவவதாரஞ் செய்யப் பெற்றது. இதுகாறும் பொதுவாக வளர்ந்து வந்த

சைவ சித்தாந்த மகாசமாசம் இங்கே கூடப்பெற்றுச் சைவ சித்தாந்தச் செந்நெறியினுல் எய்தும் பேற்றின் மேன்மையைக் குறிப்பால் உணர்த்துகின்ற திருநாள் இந்நாள் ஆகலின் எல்க.

சைவ சித்தாந்த பரமாசாரியர்களால் காட்டப் பெறும் பேரா இயற்கைப் பேரின்ப வாழ்வானது முப்பத்தாறு தத்துவங்களையுங் கடந்து அவற்றின் மேனிலையாகப் பெறற் பாலதொன்ருகலின் இந்த மகா சமாசத்தின் முப்பத்தேழாவது விழாவின் சைவ மகாநாடு தனக்குச் சிறப்பாக உரிமையுடைய மெய்கண்ட சந் தான குருமரபினர் முன்னிலையில் குரு லிங்க சங்கமம் மூன்ருனுஞ் சிறப்புற்ரேங்கும் இத்தலத்தில் அம்மை யப்பர் திருவருளால் கூடப்பெறுகின்றது மிகவும் பொருத்தமானதே ஆதலின் நல்லறிவாளர்க்குப் பெரி தும் மகிழ்ச்சியைத் தருமென்று நம்புகிரேம்.

இந்த மகாசமாசம் இதுகாறும் உலகம் உய்யவும் சைவம் நிலைபெற்ரேங்கவும் செய்து வருகின்ற சிவ நெறித்தொண்டுகள் பெரிதும் பாராட்டத்தக்கனவே என்பது நீங்கள் எல்லீரும் அறிந்திருப்பீர்கள். இந்த மகாசமாசத்தின் முப்பத்தேழாவது ஆண்டு விழாச் சைவ மகாநாட்டைத் திறந்து வைக்கும்படி நம்மை விரும்பிய உங்கள் குருபத்தியின் சிறப்பைப் பாராட்டி இந்த மகாநாட்டை இப்பொழுது இங்கே திறந்து வைக்கிரேம்.

இந்த மகாசமாசவிழாமகாநாடு தான் எண்ணிய வெல்லாம் எண்ணியாங்கு எய்தி மேம்படவும், இதற்குத் தேர்ந்துகொண்ட அவைத்தலைவரும் சொற்பொழி வாளர்களும் கூறும் நல்லறிவுரைகளை இனிது கேட்டு நீங்கள் இன்புற்றுவாழவும் கண்ணின் நல் லஃதுறுங் கழுமல வளநகர்ப் பெண்ணினல்லாளொடுமிருந்த பெருந்தகைப் பெருமானைப் போற்றுவோம்.

திருச்சிற்றம்பலம்

கண்ணுதலான் வெண்ணீற்றன் கமழ்சடையான் விடையேறி
பெண்ணிதமா முருவத்தான் பிஞ்ஞகன்பேர் பலவுடையான்
விண்ணுதலாத் தோன்றியசீர்ப் பிரமபுரந் தொழவிரும்பி
எண்ணுதலாஞ் செல்வத்தை யியல்பாக வறிந்தோமே.

திருச்சிற்றம்பலம்

அம்மூன்று நாட்களிலும் தண்டமிழ்ப் புலவர்களாகிய பல சைவப் பேரறிஞர்கள் விரிவுரைகள் நிகழ்த்தினர்கள். அதில் ஆதீனத் திருக்கூட்டத் தம்பிரான்களுள் ஒருவரான ஸ்ரீமத் மௌன. சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் அவர்களும் கலந்துகொண்டு "சைவ சமய குருகுலம்" என்பது பற்றிச் சொற்பொழிவு நிகழ்த்தியது குறிப்பிடத்தக்கது. 3-ம் நாள் ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானத்தில் அருளிச்செய்த ஆசியுரையை ஸ்ரீமத் அருணத்தித் தம்பிரான் சுவாமிகள் அவர்கள் வாசிக்கத் திருமுறை முழக்கத்துடன் சைவர்மகாநாடு இனிது முடிந்தது. ஆசியுரை வருமாறு:—

**பொன்னும் மெய்ப்பொருளும் போகமும் திருவும் புகழொடு நிறைந்து சிறந்த அன்பர்களே!**

சைவ சித்தாந்தமாகிய மெய்ம்மைச் செந்நெறி ஒன்றே ஏனைய எல்லாச் சமய நெறிகளையும் படிமுறையாகத் தன்னுள்ளே அடங்கவைத்துத் தான் இராஜாங்கத்தின் அமர்ந்தோங்குவதென்பது இங்கே நிகழ்ந்த சைவசித்தாந்த மகாசமாச விழாவின் சார்பாக மற்றைய மகாநாடுகளும், பேருரைகளும், பழைய புதிய ஆராய்ச்சிகளும், பிறவும் ஒன்றையொன்று தழுவி முரண்பாடிலாது கலந்து நடந்தமைபற்றி நன்கு தெளியப்படும்.

எங்கேனும் யாதாகிப் பிறந்திடினுந் தன்னடியார்க்கு இங்கேயென்று அருள்புரியும் எம்பெருமான் எழுந்தருளியிருந்து உயிர்களின் அறியாமையாகிய அழுக்கைக் கழுவிப் புனிதவாழ்வருளுங் கழுமலமாகிய

இந்தச் சீகாழிமாநகரத்தில் அறுபத்துநான்கு கலைகளினும் பெரும்புலமைவாய்ந்த சான்றோர் குழுமி வாழ்ந்தனர் என்பதும், இங்கே வாழ்ந்த பெருங்குடிப் பிறந்தோரெல்லோரும் கலைஞானப் புலமையாளர்க்குக் கரவாது ஈந்து புகழ்பெற்றதோடமையாது தாங்களுங் கலைஞானம் கற்றுப் புலமையுடையோராய்த் திகழ்ந்து வாழ்ந்தனர் என்பதும்,

"எட்டெட்டுக் கலைத்துறைக் கரைச்சேலக்
காணுதாரே சேராமெய்க் கழுமல வளநகரே" எனவும்,
"உரவார்கலையின் கவிதைப்புலவர்க் கோருநாளும்
காவா வண்மைக் கற்றவர்சேருங் கலிக்காழி" எனவும்,

வரும் ஆளுடைய பிள்ளையார் தேவாரத் திருப்பாடற் பகுதிகளால் நீங்கள் அறிந்திருப்பீர்கள். அப்பண்டைப் பெருமக்களின் வழிவழிவந்து, திருவேறு, தெள்ளியராதலும் வேறு என்ற தொடர்மொழிக்கு இடங்கொடாது தமிழ்க்கல்வி, ஆங்கிலக்கல்வி, சமயக்கல்வி, கலைநூற்கல்வி முதலியவற்றிலும் தெள்ளியோராய்ப் பெருநிலக்கிழமையும் பெருநிதிக்கிழமையும் ஒருங்கே பெற்றேருங்கும் நீங்கள் இந்த மகாசமாச விழாவை இங்கே நிகழச்செய்து பேரறிஞர்களை வரவேற்று அரிய பெரிய நல்லறிவுரைகளைச் செய்வித்துச் சிவநெறி மெய்ம்மை யுணர்ச்சியை உலகில் பரவச்செய்யும் நற்பெருஞ்செய்கையை நாம் பெரிதும் பாராட்டுகின்றேம்.

இந்த அறிவுரைப் பெருந்திருவிழாவைப் பேரன்போடு நிகழ்த்திய உங்கட்கும், இதில் அவைத்தலைமை தாங்கியும், சொற்பொழிவாற்றியும், வந்துசிறப்பித்தும், உதவிபலசெய்தும், நல்லுரைகளைச் செவிமடுத்தும், இயன்றவை புரிந்தும், பொதுக்காரியங்களை வகித்தும் சமாச விழாவைப் பெருமைப்படுத்திய அன்பர்கள் எல்லோர்க்கும் சிவஞானமும், நீடுவாழ்நாளும், எண்ணிய பேறும், பெருஞ் செல்வமும், நோயின்மையும்,

நல்ல நூற்கல்வியும் முதலாகிய எல்லா நன்மைகளும் மேன்மேற் பெருகிச் சிறந்தோங்கும்வண்ணம் பெரிய நாயகியம்மையொடு திருத்தோணிமிசை வீற்றிருந் தருளும் பெருந்தகைப் பெருமானது பெருங்கருணையை வேண்டுகின்றோம்.

*திருச்சிற்றம்பலம்*

மண்ணினல் லவண்ணம் வாழலாம் வைகலும்
எண்ணினல் லகதிக் கியாதுமோர் குறைவிலை
கண்ணினல் லஃதுறுங் கழுமல வளநகர்ப்
பெண்ணினல் லாளொடும் பெருந்தகை யிருந்ததே.

அந்த மில்புகழ் எந்தை யாலவாய்
பந்தி யார்கழல் சிந்தை செய்ம்மினே!

*திருச்சிற்றம்பலம்.*

இம்மகாநாட்டின் சார்பில் சைவ இளைஞர் மகாநாடும் சென்னை உயர் நீதிமன்ற வழக்கறிஞர் திரு. கா. இராமநாதச் செட்டியார் B. A., B. L., அவர்கள் தலைமையில் மிகச்சிறப்பாக நடைபெற்றது. அம்மகாநாட்டில் பல சைவ இளைஞர்கள் கலந்துகொண்டு யாவரும் வியப்புற சைவ சமயச் சொற்பெருக்காற்றினார்கள் என்றறிய பெரு மகிழ்வுதருகின்றது.

தருமபுர ஆதீன ஓதுவாமூர்த்திகளும், ஆதீன தேவாரப் பாடசாலை ஆசிரியர் மாணவர்களும், வேலூர் தேவஸ்தான ஓதுவார் திரு. வைத் தியநாத தேசிகர் அவர்களும் மகாநாட்டிற் கலந்துகொண்டு திருமுறை களை ஓதி அனைவரையும் பரவசப்படுத்தினார்கள்.

முதல்நாள் ஆதீனவெளியீடு எண் 51 ஆகிய சீகாழித் தலவரலாறு என்னும் நூல் வெளியிடப் பெற்றது. 3-ம் நாள் மெய்கண்ட சாத்திரம் மூலம் (ஆதீன வெளியீடு எண் 52. அடக்கவிலைப் பதிப்பு) வெளியிடப் பெற்றது.

# The Four Paths

[ *Late J. M. Nallaswami Pillai, B. A., B. L.* ]

(Continued from Page 46)

**How the soul merges and loses itself**

Only one word about the meaning of the word 'merging' and 'losing', before I continue the thread I quote from a text book of science:-

"When a *river* enters the *Sea*, it soon *loses* its individuality, it becoms *merged* in the body of the ocean when it loses its current and when therefore it has no power to keep in suspension the sediment which it had brought down from the Higher lands". Please re-read the lines in this way and the application will become clear, "when the soul loses its individuality (its feeling of I and mine) Ahankaram or Anavam, it becomes merged in God when it loses its karma, and when therefore it has no power to keep in suspension its mala with which it was associated from the beginning. This losing of self is the real sacrifice, brought about by love. It is this sacrifice (பலி) we are asked to make as we enter the Temple precincts and the moment we make it, our பசுத்துவம் will leave us and we will become நந்தி the Blissful Sivam.

We likened the soul to the mirror and the following passages from the upanishads may be considered.

"As a metal disk (mirror) tarnished by dust, shines bright again after it has been cleaned, so is the one incarnate person satisfied and freed from grief after he has seen the real nature of himself". And when by the real nature of himself he sees us by a lamp the real nature of the Brahman, then having known the unborn Eternal God, who transcends all tatwas, he is freed from all pasas".

"From meditating on him, from joining Him, from becoming one with Him, there is further cessation of all Mayas in the end". In Drummond's language these verses read "see God, reflect God, and become God".

Students of Darwin will have noted how powerful is the law of association and assimilation identily in the animal and human evolution. Persons who are ever associated with pigs get piggy faces, and with horses, horsey faces. In the case of a husband and wife, when they have been perfectly loving, it has been found, to effect a complete assimilation of their facial features (சாரூபம்). Such is the power of the human mind; it can lower itself to the very depths of the brute or it can raise itself to the very height of Godhood. This law is spoken of in our text books as the law of 'garudathyanam'.

This brings us to the very end of our subject.

We cannot know God really by all our religious rites and performances, repetition of prayers

and formulas by saguna or nirguna worship, with or without idols, and even by the highest yoga, evcept when His grace and Love fills us lose ourselves in this Love.

Look at how St. Maikandar ridicules this idea of the Yogi that he knows God.

"If it can be meditated, then as an object of our senses, it becomes Asat. If you regard it as not conceivable by our organs (internal and external) even then it is of no use. If you contemplate it as beyond contemplation even then it gives you no benefit as it is a mere fiction. If you contemplate it as yourself, this is also fiction. Giving up these fictitious ideas of God, the only way to know Him is by understanding with his Arul or Grace."

*(To continue)*

திருவடிப்பேரறிவு பெற்ற பின்னும் நெடுநாட் பழகிய பழக்கத்தால் ஏற்படும் மல வாசனையை, ஒப்பற்ற திருவருள் வயமாய் நின்று ஒழிக்கப் பழகுதல் வேண்டும்.

—திருவுந்தியார்.

# The Gleanings From Saiva Siddhantha

*(Sri. R. Shanmukhasundaram Chettiar.)*

### 3. The Existence of God Supreme:

To find proof of the existence of God has been the pursuit of every true philosopher in the world either in the west or in the east. The methods of approach to the subject vary with each philosopher. The experience of pain and suffering compels one to postulate an Absolute Being free from all types of miseries. Descartes (1596-1650) who is generally regarded in the world of philosophy as the beginner of the Modern Philosophy tries to postulate the existence of God through the medium of the principle of causality. He says that 'if ... ... in my mind there exists any single idea which evidently is too great to have originated from my nature, then I can be sure that outside of me there is a cause commensurate to this idea. ... ... I find in myself an idea of God as a substance infinite, eternal, immutable, independent, omniscient, omnipotent by which myself and all other things have been c r e a t e d and produced. ... ... The real existence of God Himself must be postulated, as the only being great enough to account for the presence in me of this idea of God, which indubitably exists.' John Locke (1632-1704) the founder of the new philosophy of Empiricism in speaking of the existence of God emphasizes that 'since we possess powers, perception, knowledge, all these things must be present in still greater measure in the eternal reality

from which we spring; and we can know, therefore, that a supremely powerful, knowing and intelligent being exists." Sri Meikanda Deva (12th century) the codifier or systematizer of the several tenets of Saiva Siddhantha Philosophy seeks to establish the existence of God Supreme by a scientific method of finding out the cause of the Universe. He deals with this subject in his first of the twelve aphorisms of **Sivajnana Botham**. A brief survey of his exposition supplemented with the illustrious commentary of Sri Sivajnana Munivar of Tiruvavaduthurai Mutt of South India is within the scope of this short treatise.

St. Meikandar considers this subject under three main divisions; and in the first, he seeks to prove by a logical method that this Universe is a collection of persons and objects of cognition, and therefore subject to three processes of change–creation, preservation and dissolution. In the second he tries to impress that the Universe has a permanent ground lying back, in which it dissolves and it is being operated by God in whom the permanent ground exists. Lastly he establishes that God, in whom the entire Universe has dissolved, is the God Supreme who is none other than Hara or Parasivam.

We shall now study in detail each of these three divisions. Saint Meikandar sees around him the Universe and proceeds on his quest after God, who is not perceived, from the Universe that is perceived. This perception of the Universe enables

him to study its component parts and how they were brought into being. The Universe can be fundamentally separated as **he**, **she**, and **it**, and they sustain the three processes of creation, preservation, and dissolution. This is an hypothesis which requires careful examination. It might be urged that the Universe is not a product made out of certain material, as it exists in the natural course without a beginning and an end, and that nobody has ever seen the Universe subjected to creation and dissolution. In the first instance, it ought to be proved that the Universe is a composite of living beings and dead matter. We observe that the body of a man, or an animal or any being denoted by the expressions he, she, and it, is an organism composed of many organs. The lifeless matter is seen as earth, mountain, sea, and so forth. Emerson states 'that we see the world piece by piece, as the sun, the moon, the animal, the tree etc.' Bertrand Russel views the world, 'as consisting of a multitude of entities arranged in a certain pattern.' Nobody can deny the existence of the several objects which make the whole Universe.

It is a self-evident truth, that which is composed of parts is a product or an effect produced by a certain cause or causes. A piece of cloth can be separated as warp and woof. By the admixture of warp and woof a piece of cloth is woven or produced. The effect – cloth – is produced by the cause – the admixture of warp and woof. The Universe whose parts appear as he, she, and it, is therfore an effect produced by a cause. A product or an effect is

capable of being separated into several parts and each of them has a distinguishing mark of being particularised. That which is an object of cognition is subject to destruction and in the natural course, to creation and preservation. Take an illustration of a house. It is made of bricks, mortar, timber etc., and if each of them is separated, the house does not exist. When the mason builds it, it is under creation. It is preserved when it is under occupation and when it is intact. But when all the parts are removed, the house is destroyed. Applying this analogy, the Universe being a composite of parts, is an object of cognition and it is thus subject to the three processes of change. Sivajnana Munivar explains these facts in a syllogism which runs as follows:-

That which is capable of being divided into parts is subject to the three processes of change,

The Universe is capable of being divided into parts as he, she, and it,

The Universe is therefore subject to the three processes of change.

In spite of the Universe being subjected to the three processes of change, it is an existing entity and it is eternal. Here the eternity is ascribed to it because it endures without an end. With dissolution and creation, the preservation continues. It might be argued that the objects in this Universe are created, preserved, and destroyed at different times, and instances are not available where objects have simultaneous creation

growth, and decay, and the Universe therefore continues to exist without an end. This conception is however fallacious as in certain seasons of the year things of a particular kind, like small herbs spring up, live and die together, and everything depends upon the time for such simultaneous change. Similarly the Universe may also have such a time in its own turn.

We have seen that objects denoted by **it** are subjected to the three processes of change and the beings denoted by he and **she** are also subjected to these changes. Merely as a part of the Universe of matter, man is of necessity subjected to the laws of the whole and enters into the unvarying chain of cause and effect which nature exhibits. It is beyond doubt that the Universe is a reality undergoing changes with some permanent ground lying back of the never-ending process of change.

*(To Continue)*

*வெயிலிற் சென்றோனுக்கு மரத்தின் தூய நிழலை யடைய வேண்டுமென ஒருவருஞ் சொல்லவேண்டியதில்லை. அவனே அதனைச் சென்றடைவான். உலக பாசத்தை வெறுத்தவன் திருவருணிழலையடைதற்கு விரும்பிச் சென்று அதுவாய் நிற்கு முறை அது போல்வதாகும்.*

—திருவருட்பயன்.

# "ஞானசம்பந்தம்"

**அரிய கட்டுரைகளுடன் வெளிவரும் தமிழ்த் திங்கள் வெளியீடு.**

திருக்கயிலாய பரம்பரைத் தருமபுர ஆதீனத்திலிருந்து வெளிவருவது. சைவசமயச்சார்பாய் எழுதப்படும் தெளிவான கட்டுரைகள் அடங்கியது. சைவ சமயத்தின் முழு உண்மைகளை உணர்வதற்கும் தமிழறிவைப் பெறுதற்கும் பெருந்துணையாவது.

## ஆண்டுக் கையொப்பம்

| | |
|---|---|
| உள்நாடு (இந்தியா, இலங்கை) அஞ்சற்கூலியுள்பட | ரு. 1—8—0 |
| வெளிநாடு ... ... ... ... | ரு. 2—0—0 |
| தனிப்படி (அஞ்சற்கூலி வேறு) விலை ... | ரு. 0—2—0 |

குறிப்பு:- ஓராண்டிற்குக் குறைந்த கையொப்பம் இல்லை.

**செயலாளர்.**
**"ஞானசம்பந்தம்" காரியாலயம்,**
தருமபுரம், மாயவரம்.

தருமபுர ஆதீன வெளியீடு என் 52.

## மெய்கண்ட சாத்திரம்

பொய்கண்டகன்ற மெய்கண்டதேவர் அருளிச்செய்த சிவஞானபோதம் உள்ளிட்ட பதினான்கு சாத்திரங்கள், சீகாழிச் சிற்றம்பல நாடிகள் அருளிச்செய்த துகளறுபோதம் ஆகிய இவைகளின் மூலங்கள் அடங்கியது.

சென்னைச் சைவ சித்தாந்த மகாசமாஜக் காரியதரிசி திரு. M. பாலசுப்பிரமணிய முதலியார் B. A., B. L., அவர்களாலும், சென்னைப் பல்கலைக் கழகத் தமிழாராய்ச்சியாளராகிய திருவாளர் மு. அருணாசலம் பிள்ளை M. A., அவர்களாலும், பல ஏட்டுப் பிரதிகளைக் கொண்டு ஆராய்ந்து, பிழையறத் தெளிவாகவும், அழகாகவும் அச்சிடப்பெற்றுள்ளது.

ஒவ்வொரு சைவ நன்மக்கள் வீட்டிலும் இந்நூல் சிறப்பாக இருக்கவேண்டும் என்ற பெருநோக்குடன் குறைந்த விலைக்குக் கொடுக்க ஏற்பாடாகியிருக்கிறது.

| | | | |
|---|---|---|---|
| ராப்பர் பயிண்டு | ரூ. 0—8—0 | காலிகோ பயிண்டு | ரூ. 0—11—0 |
| தபாற்செலவு | ரு. 0—2—9 | தபாற்செலவு | ரு. 0—3—0 |

முகவரி:- **டெஸ்பாட்சிங் கிளார்க்,**
தருமபுர ஆதீனம்,
தருமபுரம், மாயவரம் P. O.

தருமபுர ஆதீன வெளியீடு எண் 51

## சீகாழித் தலவரலாறு

சைவசமய பரமாசாரிய மூர்த்திகளுள் ஒருவராகிய திருஞா சம்பந்தப்பிள்ளையார் திருவவதாரஞ்செய்தருளிய பதியாகிய சீகாழ் பதியின் பெருமையை மக்கள் யாவரும் எளிதில் நன்கு உண வண்ணம் எடுத்துக் கூறும் சீகாழித் தல வரலாறு என்னும் இ வுரைநடைநூல் மூர்த்தி, தலம், தீர்த்தங்களின் பெருமைகள், வெட்டுக் குறிப்புக்கள், திருமுறைப் பாடல்கள், தனிப்பாட முதலிய பல பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு எழுதப்பட்டிருக்கிறது.

தனிப்பிரதி விலை ரூ. 0—2—9. தாபற்செலவு ரூ. 0—0—

கிடைக்குமிடம்:- கார்பார்,
ஸ்ரீ சட்டைநாதசுவா
தேவஸ்தானம்,
சீகாழி P. O.


தந்தி:- 'காசி' Tel:- 'Kasi'



கும்பகோணம். Kumbakonam.

எங்கள் ஷராப்பில் சுத்தக்கட்டி வெள்ளியில் செய்த எங்கள் முத்திரையுள்ள, நாணயப் பொறுப்புள்ள வெள்ளிப் பாத்திரங்களும், தங்க நகைகளும், வளையல், ஒட்டியாணம், சந்திரஹாரம், செயின் வகையராவும், கல்லிழைத்த நகைகளும் கிடைக்கும். கைவசமில்லாத புதுமாதிரியான சாமான்கள் குறிப்பிட்ட காலத்தில் செய்து கொடுப்பதுடன் கவசம், வாகனம் முதலிய பெரிய வேலைகளும் நேர்த்தியாகச் செய்து கொடுக்கப்படும். தருமபுர ஆதீனத்திற்கும் வாகனங்கள் முதலியன செய்து கொடுத்து நன்மதிப்பைப் பெற்றிருக்கிறோம்.

அ. சு. கனகசபை செட்டியார்,

பெரியதெரு, கும்பகோணம்.



**Printed & Published by K. Sundaresa Iyer, Agent, Dharmapuram Adheena at The Gnanasambandam Press, Dharmapuram, (Mayavaram).**